சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7 இதழ்: 12 மே - 2026 விலை - ரூ.20/-
VOL:7 ISSUE: 12 MAY - 2026 Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.320/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.100/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-12 மே-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

நீங்கள் செய்த உதவியால் உயர்ந்த வர்கள் இன்று உங்களுக்கே ஆலோசனை வழங்குகிறார்கள் என்று கவலைப் படாதீர்கள். உங்களுடைய உதவி அவருக்கு மிகச்சிறப்பாக உதவியிருக் கின்றது என்று எண்ணிப் பெருமைப் படுங்கள். அது நீங்கள் செய்த உத விக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி!

ஏனெனில், வீழ்ந்து கிடந்த ஒருவரை வழிகாட்டும் நிலைக்கு உங்கள் கரங்களே உயர்த்தியிருக்கின்றன அல்லவா? எனவே அதைக் கண்டு கோபப்படாமல், சற்றே சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் அவரிடம் இருந்து நன்றியை எதிர்பார்த் தால் உங்கள் உதவிக்கு என்ன பெயர். எனவே எதையும் எதிர்பார்ப்பின்றி செய்தேன் என்று மனதை அமைதியாக வைத்துக் கொள்வதே உண்மையான ஞானம்.

கர்மா என்பது ஒரு வட்டம் போன்றது. நீங்கள் விதைத்த நன்மைகள் அதே மனிதர்களிடம் இருந்துதான் திரும்ப வர வேண்டும் என்ற அவசியமில்லை, ஆனால், ஏதோ ஒரு ரூபத்தில் பிரபஞ்சம் அதை உங்களிடம் கொண்டு வந்து பன்மடங்காகச் சேர்க்கும்.

எனவே, அவர்களின் வார்த்தைகளை அகந்தையின் வெளிப்பாடாகப் பார்க்காமல், நீங்கள் உருவாக்கிய ஒரு நன்மதிப்பின் பிரதிபலிப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் ஆளுமை மேலும் உயரும். உங்களது நேர்மையின் பொருட்டு பிரபஞ்ச ஆற்றலை நீங்கள் முழுமையாக பெற நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று நான்காவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை சென்னை பவன்ஸ் ராஜாஜி பள்ளியின் தலைமை தமிழ் ஆசிரியர் திரு. அனந்தராமன் அவர்கள் வெளியிட, கொளத்தூர் திரு. விஜயராகவலு அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில்,

"பாராயணப்பகலவன்" திரு. சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி, திருமதி. தனம், திருமதி. இந்துமதி, திருமதி. லதா, திரு. அனந்தராமன் ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். திரு. அகஸ்டின் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

சாய் தினானாலயா ஆத்ம



ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர். புத்தக வெளியீட்டு விழா மதியம் 2 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

ஒருவரின் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிகாட்டுவது தன்னம்பிக்கை தான். தன்னம்பிக்கை மட்டுமே வாழ்க்கையை வழிநடத்தும் வல்லமை கொண்டது. தன்னம்பிக்கை இல்லாத ஒரு மனிதன் வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாது. நம் மனதில் தன்னம்பிக்கை வளரவேண்டும் அப்படி இருந்தால்தான் நாம் எதையும் சாதிக்க முடியும்.

நீங்கள் உங்களை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக நேசிக்க ஆரம்பிக்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு உங்களுக்குள் தன்னம்பிக்கை வேரூன்றும். விரைவாகவே அதன் பயனை நீங்கள் உணர ஆரம்பிப்பீர்கள். எந்திரம்போல் எப்போதும் வேலை, வேலை என்று அலையாமல் உடலுக்கும். உள்ளத்திற்கும் சற்று ஓய்வு கொடுத்து உங்களை நேசிக்கத் தொடங்குங்கள்.

உங்கள் மேனியழகு, உங்கள் உள்ளத்தில் தன்னம்பிக்கையை முழுமையாக மலரச்செய்யும். அதற்காக தினந்தோறும் உடற்பயிற்சி செய்யுங்கள். நிறைய தண்ணீர் பருகுங்கள். இனிப்பு பலகாரங்கள், கொழுப்புச்சத்துள்ள எண்ணெய் பலகாரங்களை தவிருங்கள். இரவில் நன்றாக தூங்குங்கள்.

உங்களிடம் உள்ள சின்னஞ்சிறு குறைகளை பிறர் சுட்டிக்காட்டும் முன்பு நீங்களே அறிந்து, அவைகளை அகற்றும் வழிகளை ஆராய்ந்து வெற்றி காணுங்கள். உங்கள் தோல்விகளை



ஒப்புக்கொள்ள வெட்கப் படாதீர்கள். இப்படிச் செய்தால் தடைக்கற்கள் படிக்கட்டுகளாக மாறுவதை உணர்வீர்கள்.

உங்கள் சொந்த வாழ்க்கை, தொழில், வியாபாரம், பணத்தேவை போன்ற அனைத்தையும் பற்றி முதலிலே ஒரு செயல்திட்டம் வகுத்து விடுங்கள். அதற்கு தக்க படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் எதிர்காலம் வளமாக அமையும். வளமான வாழ்க்கை தன்னம்பிக்கையை வளர்க்கும்.



நம்பிக்கை ஒன்றே செல்வம், ஆரோக்கியம், மகிழ்ச்சி, மூன்றையும் தரும்! உங்களை நீங்கள் நம்புங்கள். உங்கள் மீது நீங்கள் ஒருபோதும் அவநம்பிக்கை கொள்ளாமல் எப்போதும் நம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள் திறமையை நீங்களே நம்பாவிட்டால் வேறு யார் நம்புவார்கள்? நம்பிக்கையே உங்களின் திறமைக்கும், செயல் திறனுக்கும் சரியான அஸ்திவாரம்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

●

புத்தக வளர்ச்சி நன்கொடை


நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 90 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. கார்த்திக் லோகேஸ்வரி, வாடிப்பட்டி. ரூ.500.
திரு. ராமகிருஷ்ணன், கோவை. ரூ.200
திருமதி. ஜெயா ரவிக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. கமலா தட்சிணாமூர்த்தி ரூ.200.
திரு. கோபாலன். சென்னை. ரூ.200.
திரு. நாகேந்திரன். சென்னை ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திருமதி. நந்தினி, சென்னை. ரூ100

சாய்சரிதம்-26

கதை வடிவில்



எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

ஒரு மனிதன் கடலில் நீராடும் போது அனைத்து புண்ணிய நதிகளிலும் நீராடிய பலனைப் பெறுகின்றான். அதே போன்று ஒரு மனிதன் சற்குருவின் பாதங் களில் அடைக்கலம் புகும்போது பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த மகாசக்திகளையும் அடைந்த வனாகின்றான். கற்பகத்தருவும், ஞான சாகரமுமான, நமக்கு ஆன்ம உணர்வை அளிப்பவருமான சாயிக்கு ஜெயம் உண்டாகட்டும்.

ஓ சாயி! தங்களின் கதைகளின் மேல் எங்களுக்கு ஆர்வம் உண்டாகச் செய்யுங்கள். உங்கள் கதைகளை கேட்கும் அனைவருக்கும் சாத்வீக உணர்வுகள் மேலோங்கட்டும். அனைவரது பிரட்சனைகளும் மறைந்தொழியட்டும். ஆன்ம உணர்வு என்ற ஆத்ம ஞானத்தை பெறட்டும்.

பாபாவிடம் சரண் அடைவது மட்டுமே மாயைகளில் இருந்து விடுபடுவதற்கு சிறந்த வழியாகும். மாயைகளுக்கு அப்பால் வேதங்களால் உன்னை எடுத்துச்செல்ல முடி யாது. சத்குரு ஒருவரே அவ்வாறு செய்ய முடியும்.



பாபா தம் அடியவர்களுக்கு உபதேசம் அளிக்கும் பல முறைகளை சென்ற அத்தியாயங்களில் கண்டோம். அவற்றில் சில முறைகளை இங்கே காண்போம். தாங்கள் பாராயணம் செய்ய விரும்பிய மத நூல்களை சிலர் பாபாவிடம் எடுத்துச் சென்று அவரால் தொடப்பட்டு புனிதமாக்கப்பட்டு, அவைகளை திரும்பப் பெற்றுக்கொள்வது வழக்கமாக இருந்தது.

ஒரு முறை காகா மகாஜனி, "ஏகநாத பாகவதம்" புத்தகம் ஒன்றுடன் சீரடிக்கு வந்தார். அந்தப்புத்தகத்தை சாமா அவரிடம் கேட்டுக்கொண்டு படிப்பதற்காக மசூதிக்கு எடுத்துவந்தார். பாபா அதை அவரிடம் இருந்து வாங்கி அங்கும் இங்குமாக சில பக்கங்களை புரட்டிப்பார்த்துவிட்டு, சாமாவிடமே திரும்ப கொடுத்து," இதை நீயே வைத்துக்கொள்" என்றார். உடனே சாமா, பாபா இந்த புத்தகம் காகாவுடையது. அதை அவருக்கு திரும்பக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

இல்லை இல்லை அந்த புத்தகத்தை நான் உனக்குக் கொடுத்ததால் அதை நீயே வைத்துக்

- வே.ஸ்ரீராம்

கொள். அது உனக்குப் பயன்படும் என்று கூறினார். இவ்விதமாக பல நூல்கள் சாமாவிடம் ஒப்படைக்கப்பட்டன. காகா அடுத்தமுறை வந்தபோது மற்றொரு பாகவத்துடன் பாபாவை சந்தித்தார். பாபா அதை அவருக்கு பிரசாதமாக திரும்ப அளித்து அதை பத்திரமாக வைத்துக்கொள்ளும் படியும் அது அவரை நல்ல நிலையில் வைத்துக்கொள்ளும் என்றும் கூறினார். காகாவும் அதை பக்தியோடும் பணிவோடும் பெற்றுக் கொண்டார்.

சாமா, பாபாவின் மிக நெருங்கிய பக்தர் அவருக்கு விஷ்ணு சகஸ்ர நாமத்தின் ஒரு பிரதியைக் கொடுத்து ஆசீர்வதித்த நிகழ்வைக் கூறுகின்றேன் கேளுங்கள். ஒருமுறை ஒரு ராமபக்தர் சீரடிக்கு வந்து சில காலம் தங்கியிருந்தார். அவர் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு காவி உடுத்தி திருமண் இட்டுக்கொண்டு, விஷ்ணு ஸஹஸ்ரநாமம், அத்யாத்ம இராமாயணம் போன்றவை களை நம்பிக்கையுடன் படிப்பார். ஆனால் அவர் மிகுந்த கோபக்காரர், பிடிவாதக்காரர், பாபா அவருக்கு பாடம் புகட்டவும் எண்ணம் கொண்பார்.

ஒருநாள் பாபா அவரை தன்னருகே அழைத்து, "நான் தாங்கமுடியாத வயிற்றுவலியால் அவதிப்படுகின்றேன். நீ கடை வீதிக்குச் சென்று பேதி மருந்து வாங்கிவா" என்றார். ராமபக்தரும் உடனடியாக கடைவீதிக்கு புறப்பட்டுப் போய்விட்டார். உடனே பாபா தனது ஆசனத்தில் இருந்து எழுந்து கீழிறங்கி வந்து ராமபக்தர் அமர்ந்திருந்த இடத்தில் இருந்த விஷ்ணு சகஸ்ரநாமா புத்தகத்தை எடுத்துக் கொண்டு தம்மிடத்திற்கு வந்து சாமாவிடம், ஓ சாமா! இப்புத்தகம் மிகவும் பயனுள்ளது, பலனுள்ளது. இதை நீயே பத்திரமாக வைத்துக்கொள் என்றார்.

மேலும், ஒருமுறை நான் தீவிர மான நெஞ்சுவலியால் அவதிப் பட்டேன். என் இதயம் துடிக்கத்தொடங்கி என் உயிர் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தது. அப்போது நான் இந்த நூலை என் நெஞ்சோடு வைத்து அனைத்துக் கொண்டேன். சாமா அப்போது எனக்கு அது மிகவும் ஆறுதல் அளித்தது. இறைவனே என்னை காப்பாற்ற கீழே இறங்கி வந்தாரென்று நினைத்தேன். எனவே இதை உனக்கு கொடுக்கின்றேன். தினந்தோறும் குறைந்தபட்சம் ஒரு நாமத்தையாவது படி அது உனக்கு மிகுந்த நன்மை செய்யும் என்றார்.

உடனே சாமா, அது எனக்கு வேண்டாம் பாபா, அது ராமபக்தருக்கு சொந்தமானது. அவன் ஒரு பைத்தியம், கோபக்காரன் நிச்சயம் என்னுடன் சண்டைக்கு வருவான். தவிர நான் ஒரு கிராமத்தான். எனக்கு சமஸ்கிருதம் தெரியாது என்றார்.

சாமா, இச்செய்கையின் மூலம் ராம்பக்தருக்கு எதிராக தன்னை கிளப்பி விடுவதாக நினைத்தார். தான் படிப்பறிவு இல்லாத கிராமத்தானாக இருந்தாலும், பாபாவின் அன்புக்கு உரியவராக இருப்பதால் தனக்கு உதவிய கடவுள் சக்தியான விஷ்ணு



சகஸ்ரநாமத்தை படிக்க வைத்து தன்னை இறப்பு, பிறப்பிலிருந்து காப்பாற் நினைக்கின்றார் என்பதை உணராத சாமா அந்த புத்தகத்தை பாபாவிடம் இருந்து வாங்க மறுத்தார். ஆனால் பாபாவோ புத்தகத்தை சாமாவின் கைகளில் வலுக்கட்டாயமாக திணித்து விட்டார்.

சற்று நேரத்திற்குப் பின் கடைவீதிக்குச் சென்ற ராமபக்தர் பேதி மருந்துடன் மசூதிக்கு வந்தார். அதே நேரம் அங்கிருந்த அண்ணா சிஞ்சனீக்கர் நாரதர் வேலை செய்ய விரும்பி அங்கு நடந்ததை எல்லாம் ராமபக்தரிடம் கூறினார். ராமபக்தர் உடனே கோபத்தில் குதிக்க ஆரம்பித்துவிட்டார். கத்திக்கொண்டே தனது முழு வெறியுடன் சாமாவிடம் வந்தார்.

தனக்கு வயிற்றுவலி என்று கூறுமாறு பாபாவை தூண்டிவிட்டு தன்னை கடைவீதிக்குச் செல்லும்படி செய்துவிட்டு தனது புத்தகங்களை அபகரித்துக்கொள்ள திட்டம் தீட்டியதாக சாமாவைப் பார்த்து கத்தினார். மேலும் உடனடியாக எனது புத்தகங்களை தராவிட்டால் சுவற்றில் முட்டி என் மண்டையை உடைத்துக் கொள்வேன் என்று சத்தம் போட்டார்.

சாமா அவரிடம் ஏதும் வாக்குவாதம் செய்யாமல் அமைதியாக நின்றார். அப்போது பாபா அவரை நோக்கி, "ஓ ராமதாஸி, என்ன விசயம் ஏன் இவ்வாறு சத்தம் போடுகின்றாய், உனக்கு என்ன ஆயிற்று, சாமா நம்ம பையன் இல்லையா?

ஒரு சின்ன விசயத்திற்கு ஏன் இவ்வளவு கோபப்படுகின்றாய்? நீ தினந்தோறும் புனித நூல்களைப் படித்தும் உனது மனம் தூய்மை யற்றதாகவும், உணர்வுகள் கட்டுப்பாடு இல்லாமலும் இருக்கின்றதே! நீ என்ன ராமதாஸி.

இவைகளின் மீது நீ பற்றற்று இருக்க வேண்டாமா? ஒரு புத்தகத்தின் மீது நீ இவ்வளவு

அதிகமாக பற்று வைத்திருப்பது வியப்பாக இருக்கின்றது. உண்மையான ராமதாஸிக்கு பற்று இருக்கக்கூடாது. எல்லோரையும் சமமாக அல்லவா நினைக்க வேண்டும். ஒரு புத்தகத்தை எடுத்ததனால் நீ என்ன குறைந்து போய் விட்டாயா? பணம் கொடுத்தால் இதுபோன்ற ஏராளமான புத்தகங்களை வாங்கலாம் தெரியுமா? ஆனால் கோடி கொடுத்தாலும் நல்ல மனிதர்களை வாங்க முடியாது என்பது உனக்குத் தெரியாதா,?

இவையெல்லாம் நினைத்துப் பார்த்து அடுத்தவர்களிடம் அன்பாக நடந்து கொள். உன் புத்தகம் என்ன மதிப்பு பெறும் அதைப்பற்றி சாமாவிற்கு எந்த மதிப்பும் இல்லை. நான் தான் அதை எடுத்து அவனுக்குக் கொடுத்தேன். உனக்கு அது மனப்பாடமாக தெரியும் அல்லவா? சாமாவும் அதைப்படித்து பயனடைய வேண்டும் என்று நினைத்தேன் அதனால் அதை எடுத்து சாமாவிற்கு கொடுத்தேன். என்றார்.

பாபாவின் அமைதியான மொழிகளைக் கேட்ட ராமதாஸி அமைதியானார். தன் தவறுக்காக மனம் வருந்தி, சாமா, விஷ்ணு சகஸ்ரநாமம் உங்களிடமே இருக்கட்டும். அதற்குப்பதில் பஞ் சரத்னி கீதை ஒன்று எனக்குக் கொடுங்கள் என்றார். சாமாவும் அதற்கென்ன பத்துபிரதிகள் கூட தருகின்றேன். என்னிடம் ஏராளமாக இருக்கின்றன என்று கூற பிரட்சனை ஒருவழியாக சமாதானத்திற்கு வந்தது.

ஒருவழியாக பாபாவின் திருவிளையாடலின் மூலம் ராம பக்தரின் கோபமும் அறியாமையும் அடக்கப்பட்டது. அதே வேளையில் சாமாவும், விஷ்ணு சகஸ்ரநாமத்தை படிப்படியாக கற்றுக்கொண்டார். ஹரி சீத்தாராம் தீட்சித்தும், பேராசிரியர் நரகேயும் சாமாவிற்கு சமஸ்கிருதத்தை உச்சரிக்கக் கற்றுக்கொடுத்தனர். காலப்போக்கில் விஷ்ணு சகஸ்ர நாமம் சாமாவிற்கு மனப்பாடம் ஆகிவிட்டது.

ஒருநாள் காகாசகேப் தீட்சித் சீரடியில் உள்ள தனது வாடாவில் காலையில் தியானம் செய்து கொண்டிருந்தபோது விட்டலின் காட்சியைக்கண்டார். பின்பு பாபாவை காண மசூதிக்குச் சென்றபோது பாபா, என்ன விட்டல் வந்தாரா? நீ அவரைக் கண்டாயா? அவர் மிகவும் நலுவல் பேர்வழி அவரை இறுகப் பிடித்துக் கொள்ளும். இல்லாவிட்டால் ஓடிவிடுவார் என்று கூறினார்.

அதன் பின் அன்று மாலையில் விட்டலின் ஓவியங்களை எடுத்துக்கொண்டு ஒரு வியாபாரி வந்தான். அந்தப்படங்களை பார்த்து தீட்சித் மிகவும் ஆச்சர்யப் பட்டார். காலையில் தன் கனவில் வந்த விட்டலைப்போன்றே ஓவியத்திலும் இருந்தார் விட்டல். உடனே பாபாவின் மொழிகளான "விட்டலை இறுக்கிப் பிடித்துக் கொள்" என்ற வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. உடனடியாக அதில் ஒரு படத்தை வாங்கி தன் பூஜை அறையில் மாட்டினார் தீட்சித்.

பிரம்ம வித்தையை கற்பவர்



களை பாபா எப்போதும் நேசித்தார். ஊக்குவிப்பார். அப்படி ஒரு சம்பவம் பாபுசகேப் ஜோக் அவர்களுக்கு நடந்தேறியது. பாபு ஒரு முறை கீதாரகஸ்யம் என்ற நூலை மும்பையில் இருந்து பார்சலில் பெற்றிருந்தார். பார்சலை தன் கக்கத்தில் வைத்துக்கொண்டு பாபாவை நமஸ்காரம் செய்ய குனிந்தார். அப்போது கக்கத்தில் இருந்த பார்சல் நழுவி பாபாவின் காலடியில் சென்று விழுந்தது.

உடனே பாபா அது என்ன பார்சல் என்று விசாரித்தார். உடனே பார்சலைப் பிரித்து கீதா ரகஸ்யம் நூலை பாபாவிடம் கொடுத்தார் பாபு. பாபா புத்தகத்தை அங்கும் இங்கும் புரட்டிப்பார்த்துவிட்டு தன் பையில் இருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அதில் வைத்து பாபுவிடம் கொடுத்து, "இதை முழுமையாகப் படி உனககு நனமை விளையும்' என்றார்.

திரு. கபர்டே ஒருமுறை தன் குடும்பத்துடன் சீரடிக்கு வந்து சில மாதங்கள் தங்கியிருந்தார். திரு. கபர்டே சாதாரண மனிதர் அல்ல! அவர் அமராவதியில் மிகப்பெரிய செல்வந்தர். மற்றும் புகழ் பெற்ற வழக்கறிஞர் ஆவார். சிறந்த புத்தி சாதுர்யமும் பேச்சாளரும் ஆவார். புகழ் பெற்ற பஞ்சதசி என்ற அத்வைத நூலின் கருத்துக்களுக்கு விளக்கம் கூறும் அளவிற்கு வல்லமை உடையவர். ஆனால் அவர் பாபாவின் முன் வாயை திறக்கவே மாட்டார்.

சாதாரண பக்தர்கள் கூட பாபாவிடம் அடிக்கடி பேசி விவாதித்தனர். ஆனால் திரு. கபர்டே, திரு.நூல்கர், திரு. பூட்டி ஆகிய மூவர் மட்டும் பாபாவின் முன் எப்போதும் மௌனமாகவே இருந்தனர். அந்தளவிற்கு மூவரும் சாந்தம், பொறுமை, எளிமை போன்ற நற்பண்புகளை கொண்டவர்களாக இருந்தனர்.

திரு. கபர்டே சீரடியில் நான்கு மாதங்கள் தங்கியிருந்து பாபாவின் ஆசீர்வாதங்களைப் பெற்றார். ஆனால் அவரின் மனைவி, திருமதி. கபர்டே ஏழு மாதங்கள் தங்கியிருந்தார். திருமதி. கபர்டே பாபாவின் மேல் பெருமளவில், பக்தி, விசுவாசம், ஆழ்ந்த அன்பு வைத்திருந்தாள். ஒவ்வொரு மதியமும் பாபாவிற்கு வித விதமான நைவேத்தியங்களை செய்து எடுத்து வருவாள். பாபா சாப்பிட்ட பின்பே அவள் சாப்பிடுவாள்.

ஒரு நாள் மதியம் பாபாவிற்கு நைவேத்தியமாக, கோதுமை பலகாரம், பூரி,சாதம், சூப்,

சர்க்கரைப் பொங்கல், வற்றல் இவைகளுடன் மசூதிக்கு வந்தாள். வழக்கமாக சாப்பிட வருவதற்கு மிகவும் தாமதப்படுத்தும் பாபா அன்று எண்ணவோ உடனடியாக எழுந்து கொண்டு சாப்பிடும் இடத்திற்கு வந்து திருமதி. கபர்டே பரிமாறும் முன்பே தானே பாத்திரத்தை திறந்து உண்ணத் தொடங்கிவிட்டார்.

இதைப்பார்த்துக் கொண்டிருந்த சாமா, பாபா, ஏன் இந்த பாரபட்சம், கடந்த ஏழு மாதமாக எங்களின் பிரசாதங்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன் என்கின்றீர்கள். ஆனால் இந்தப் பெண்மணி கொண்டுவரும் பதார்த்தத்தை ஊக்கத்துடன் நீங்களே வலியச் சென்று சாப்பிடுகின்றீர்கள். இவள் கொண்டுவரும் உணவு மட்டும் அவ்வளவு ருசியாக இருக்கின்றதா என்ன? என்று கேட்டார்.

பாபா கூறினார், ஆமாம் சாமா, அவ்வளவு இனிமையாகத்தான் இருக்கின்றது. இவளை இந்தப்பிறவியில் மட்டும் அல்ல. பல பிறவிகளாகவே நான் அறிவேன். முன் பிறவியில் ஒரு வியாபாரியின் வீட்டில் பசுமாடாக பிறந்து அனைவருக்கும் பால் கொடுத்து வந்தாள். பின்னர் அடுத்த பிறவியில் ஒரு தோட்டக்காரன் குடும்பத்திலும், பிறகு ஒரு சத்திரிய குடும்பம் ஒன்றிலும் பிறந்து ஒரு வணிகனைத் திருமணம் செய்து கொண்டாள். அதன்பின் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தாள்.

அதற்குப்பின் மிக நீண்ட காலத்திற்குப் பின் இப்போதுதான் இவளைக் காண்கின்றேன். என்றவாறே திருமதி. கபர்டே கொண்டுவந்த பலகாரங்கள் அனைத்தையும் உண்டுவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டு தன் இடத்திற்கு வந்து அமர்ந்தார். பின்னர் திருமதி. கபர்டே பாபாவின் கால்களை பிடித்துவிடத் தொடங்கினாள். உடனே பாபாவும் ராஜாம்மா, ராஜாம்மா என்று அன்புடன் அழைத்து அவளது கைகளை பிடித்து விட்டார். இதைக்கண்ட சாமா, கடவுளும், பக்தையும் ஒருவருக்கொருவர் சேவை செய்து கொள்வதை காண்பது அற்புதக் காட்சியாக இருக்கின்றது என்று கூறினார்.

இந்நிகழ்வு சாதாரணமான தல்ல! ஒரு குரு சீடனின் சேவையில் மனமகிழ்ந்து தனது சக்தியை சீடனுக்கு மாற்றிவிடும் சுட்சுமமாகும். இதை நீ உன் குருவுக்கு எப்போதும் செய்துவா, நீ உன் வாழ்க்கையின் நோக்கத்தை எய்துவாய். உனது மனம் சாந்தி பெற்று பெறுமளவு நீ பயனடைவாய் என்று திருமதி. கபர்டேவிடம் கூறினார்.

குருவிற்கும், சீடனுக்கும் இருக்க வேண்டிய உறவுத்தன்மையை இந்நிகழ்ச்சி நமக்கு விளக்குகின்றது. இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு கூர்ந்து சேவை செய்ய வேண்டும். குருவிற்கும் சீடனுக்கும் இடையில் எந்தவித பாகுபாடும் இருக்கக் கூடாது. அவர்களிடையே பாகுபாடு பார்ப்பவன் இன்னும் பக்குவம் அடையாதவனும் ஒழுங்கற்றவனுமாவான்.

ஸ்ரீ சாயியைப் பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்!

(தொடரும்)



கோபர்கானில் உதி

சிதம்பர் ஆர்.கே. காட்கில் பாபாவின் தரிசனத்திற்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஷிரிடிக்குச் சென்றார். முதலில் இது எளிதாக இருந்தது, ஏனெனில் அவர் அகமது நகர் மாவட்ட ஆட்சியரின் தனிப்பட்ட உதவியாளராக இருந்தார். பின்னர் அவர் சின்னாரில் மம்லதாராகப் பணியாற்றினார். பலமுறை அவர் ஷிரிடிக்கு வந்து பாபாவின் தரிசனத் தைப் பெற்றார்.

பின்னர் அவர் தொலைதூர இடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் கட்டளைகளைப் பின்பற்றினார், ஆனால் கனத்த இதயத்துடன். அவர் மேற்கொண்ட பயணம் கோபர்காவ்ன் வழியாக இருந்தது, ஆனால் அவர் தனது பயணத்தை நிறுத்தி ஷிரிடிக்குச் செல்ல முடியவில்லை.

கோபர்காவில், ஷிரிடிக்கு மிக அருகில் இருந்தும் பாபாவின் தரிசனத் தைப் பெற முடியாததால், அது எவ்வளவு பயனற்றது என்று அவர் யோசித் துக்கொண்டிருந்தார். அவர் இப்படி நினைத்தபோது, அவரது மடியில் ஒரு உதி பொட்டலம் வந்து விழுந்தது. யார் இதைச் செய்தார்கள் என்று பார்க்க ஜன்னல் வழியாகப் பார்த்தார், ஆனால் யாரையும் பார்க்க முடியவில்லை.

அவர் பயபக்தியுடன் பொட்டலத்தை எடுத்துப் பாதுகாப்பாக வைத்திருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அவருக்கு ஷிரிடிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது, அங்கு பாபா, "நீ ஷிரிடிக்குச் செல்ல முடியாவிட்டாலும், கோபர்கானில் என் உதியை உனக்குக் கொடுக்கவில்லையா?" என்று கேட்டார். பாபாவின் அன்பைக் கண்டு காட்கில் மகிழ்ச்சியடைந்தார், எனவே அவர் உதியை ஒரு தாயத்தில் வைத்து தொடர்ந்து அணிந்திருந்தார்.

"நான் என் பக்தர்களின் சக்தியில் முழுமையாக இருக்கிறேன், அவர்கள் பக்கத்தில் நிற்கிறேன். என்றென்றும் நான் அவர்களின் அன்பிற்காக ஏங்கி, துன்பத்தில் அவர்களின் அழைப்பிற்கு உடனடியாக பதிலளிக்கிறேன்," என்று டாக்டர் பண்டிட் பாபாவின் நெற்றியில் சந்தனம் பூசியபோது, பாபா தாதா பட்டிடம் (சாய் சத்சரித்ரா, அத்தியாயம் 11) கூறினார். ●

தொடர் - 35

திருவருள் தேடி

ஓம் சாய்ராம். அன்பான சாய் மஹாராஜ் குருவை தேடி வாசகர்களுக்கு சுந்தர் சாய் இருகரம் கூப்பி, சிரம் தாழ்த்திய வணக்கம் உரித்தாகட்டும். அனுப வங்களை பகிர்ந்து கொள்ள நல்வாய்ப்பை நல்கிடும் ஸ்ரீராம் பாபாவிற்கு நன்றி கலந்த நமஸ்காரம். எங்கும் எப்பொழுதும் எல்லாமுமான சமர்த்த சத்குரு சாய்மஹாராஜ் திருவடி கருணையை போற்றுவோம்.

சென்ற இதழில் நமக்கு கிடைத்த அறிய வாய்ப்பான "சாய் சத்சரித்ரம் காட்டும் பாதையில்" எனும் ஆன்மீக அனுபவ கருத்து பரிமாற்றம் குறித்த ஏற்பாடுகள் எவ்வாறு துவங்கியது என முடித்தோம். இரண்டாம் தலைப்பாக, பக்தி மார்க்கம் பற்றி பேச மிக பிரபலமான ஆன்மீக சொற்பொழிவாளரான Dr. சுதா சேஷய்யன் அவர்களை அழைக்க விருப்பம். அவரோ மிக மிக பிஸி. எவ்வளவோ முயற்சி செய்தும் நேரமே கிடைக்கவில்லை.


அவர்கள் எனது மூத்த சகோதரிக்கும், கீதப்ரியாவின் குடும்பத்திற்கும் நெருங்கிய நண்பரான பொழுதும் தொடர்பு கொள்ளவே இயலவில்லை. தீவிர முயற்சி செய்து ஒரு வழி யாக பாபாவின் அருளால் சம்மதம் கிடைத்தது. மூன்றாவது தலைப்பான ஞான மார்க்கம் பற்றி பேச குண்டலினி யோகி குரு ஸ்ரீராம் பாபா அவர்கள் நட்போடு எளிதாக சம்மதம் தெரிவித்து ஆசி வழங்கி ஊக்கப்படுத்தினார்.

குரு பூர்ணிமாவை ஒட்டி ஜூலை 19, 2025 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 8 மணிவரையிலான நிகழ்ச்சி யாக திட்டமிட்டு வேலை செய்ய ஆரம்பித்தோம். பார்வை யாளர்களையும், செலவிற்கு பணமும் திரட்ட வேண்டுமே என்கிற கவலை பற்றிக்கொள்ள, இது பாபாவின் நிகழ்ச்சி நாம் ஒரு கருவி மட்டுமே, எல்லாம் சிறப்பாக பாபா நடத்திக்காட்டுவார் என்று உறுதி அளித்தேன்.

முதல் முயற்சி ஆனதாலும், பொது நிகழ்ச்சியானதாலும்



சுந்தர் சாய்
9789404451



பொறுப்பு அதிகம். "தத்த குடும்பம்" குழு உறுப்பினர் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, மேற்சொன்ன இரண்டிற்கும் தீவிரமாய் உழைத்தனர். நிறைவான கூட்டமும் (சுமார் 400+) தேவைக்கும் அதிகமாகவே பணமும் வசூல் ஆயிற்று. பரிபூரணமாய் சாய் மஹராஜ் க்ருபை வேலை செய்வதை நிரூபித்தது. விழா அழைப்பிதழ் ஷீர்டியில் பாபாவிற்கு சமாதி மந்திரில் சமர்ப்பணம் செய்யப் பட்டு, அனைவர்க்கும் விநியோகம் செய்யப்பட்டது.

கீதப்ரியா குடும்பத்தினரும், சாய் த்யானாலயா நண்பர்களும் தங்கள் இல்லப்பெருவிழாவாக கருதி பொறுப்பேற்று அதிசயிக்க தக்க வகையில் நன்கு பங்கு கொண்டு நடத்தினர். திரு. பாலாஜி 'கிரி ட்ரடேர்ஸ்' நிறுவனத்தின் பங்களிப்பை பெற்று தந்தும் பொருளுதவியளித்ததும் பாபாவின் திருவருட் கருணையை நிரூபித்தது. இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் வாய்ப்பையும் பிடிவாத மாய் கீதப்ரியா நமக்கு அளித்தார்.

பெங்களூருவிலிருந்து பிரத்யேக மாய் இந்த விழாவில் பங்களிக்க வந்த கீதப்ரியாவின் சகோதரியின் இளம் குமாரிகள் ஸ்வேதா, ஷிவானி இருவரும் 'கீதாஞ்ஜலி, நாட்டியாஞ் ஜலி' என சமர்ப்பணம் மூலம் பிரமாதமாய் விருந்தளித்தனர்.

சாய் வேதம் என்று அறியப்படும் பாபாவின் சாய் சத்சரிதம் பறை சாற்றிய வாழ்க்கைப் பாடம் வழங்கும் அனுபவங்களின் வழியில், பொது மேடை அமைத்து சொற்பொழிவு ஏற்பாடு செய்து, பணியாற்ற கீதப்ரியாவின் அறிமுகம் மூலம் நமக்கு கிட்டிய இந்த அரிய

வாய்ப்புடன், முத்தாய்ப்பாக நமது நீண்ட நாள் நிறைவேறா விருப்பமான உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண தரிசனமும், அத்துடன் கூடுதலாய் அதி விசேஷமாக, ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தில் அகண்ட பகவத் கீதா பாராயணம் செய்யும் குழுவில் இணைந்து பயணிக்க , பாராயணம் செய்யும் பாக்கியமும், மூகாம்பிகை மற்றும் ஸ்ருங்கேரி சரதாம்பாள் தர்சனமும் கிடைத்தது.

அதுவே நமது முதல் பகவத் கீதா பாராயணம் என்பதோடு மட்டுமின்றி வியாழனன்று, கீதாச்சர்யன் முன்னிலையில் என்னும் போழுது 'சாய் மகராஜின் அனுக்ரஹ முத்திரை 'ஜொலிக்கிறதல்லவா?. குரு கடாக்ஷம் பரிபூரணம்! என்பது இது தானோ.

நினைவலைகள் சற்றே பின்னோக்கி நகர்ந்து விரியும் பொழுது, சென்னை மாநகரில் துயரமான ஒரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பலரது வாழ்வை புரட்டிப் போட்டது நினைவுக்கு வருகிறது. 2015ல் தரமணி –வேளச்சேரி ரோட்டில இருந்த எனது மூத்த சகோதரி வீட்டினுள்ளும் வெள்ளம் புகுந்து சுமார் 4 அடி வரை உயர்ந்து பலத்த பொருட்சேதம் ஏற்பட்டது. ஆனால் சரியான தூரலாய் மழை தொடங்கிய பொழுதே, (வெள்ளம் விபரீதமாய் பெருகுவதற்கு முன்னரே நாம் ஏற்கனவே திட்டமிட்டபடி மதுரையில் ஒரு விசேஷத்திற்கு சென்று, அங்கேயே தங்கும்படி ஆயிற்று. வெள்ளம் வடிந்து ரயில் போக்குவரத்து தொடங்கிய பின்னரே திரும்ப நேரிட்டது கூட பாபாவின் பாதுகாப்பே.

என்னதான் நாம் நலமுடன் காப்பாற்றப்பட்ட பொழுதும் பொது மக்களின் அளவிற்கு அதிகமான பாதிப்பும் துன்பமும், நம்மையும் மிகவும் துயரம் அடைய வைத்தது . ஒரு உதவியும் செய்யவில்லையே ' சாய்ராம் ' என ஆத்மார்த்தமாய் ஏங்கி வேண்ட.. நொடிப்பொழுதில், தொலைபேசி விளித்தது. 'நான் சிவராம் பேசுறேன்.. வெள்ள நிவாரணப் பொருட்கள் பேக்கிங் செய்து லாரிகளில் அனுப்பும் சேவை மிக மிகப்பெரிய அளவில் சத்யசாய் சமிதியினால் " சுந்தரம் " சத்ய சாய் ஆலயத்தில் நடக்கிறது. சென்று சேவை செய்ய விருப்பமா '.. என நீண்ட நாள் நண்பர் ஒருவர் கேட்க, சாய்ராமின் அபார கருணையை எண்ணி கண்ணீர் மல்கியது. உடனே கிடைத்த வாய்ப்பு மெய்மறக்க செய்த திருவருள்.

அந்த சேவையில் ஈடுபட்ட சாய் பக்தர்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சமுதாயத்தில் உயர் அடுக்கில் இருப்பவர்கள், உடல் நலம் குன்றிய முதியோர் என தன்னலமற்ற சாய் சேவா நம்மை தலை வணங்க வைத்த அனுபவம். அவ்வளவு உற்சாகம், இணைந்து பணியாற்றுதல், ஹை எனர்ஜி உடன் கூடுதலாய் சேவாதள் அன்பர்களின் உபசரிப்பு காபி, டிபன், சாப்பாடு, மாலை இனிப்புடன் பலகாரம். சத்ய சாய் பகவான் பெயரால் ஈடு இணையற்ற ஆனந்த அனுபவமாய் மலர்ந்த மிகப்பெரிய வரப்பிரசாதம் நமக்கு.

இதற்கு இணையான சம்பவம் தான் நாம் கொரோனா சமயம் ஒன்று கூட முடியாம நிறுத்தப்




பட்ட ஏக தின பாராயணமும், வியாதி நின்ற போதும் பீதி மாற வில்லை. நாம் என்ன செய்வது என பாபாவிடமே வேண்டினேன்.

அதற்கு விடையாக ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பார்த்து, பின்னர் மறுபடியும் சந்தித்த இளமைக்கால குடும்ப நண்பர் 'கோபுரம் டிவி'யின் கணேஷ் பிரசாத். அவரும் அந்த நேரத்தில் ஒரு பிரபல பேச்சாளர் விலகிய கட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு நாங்கள் மீண்டும் சந்தித்தது. நாம் சாய் மற்றும் தத்த அவதாரங்கள் பற்றிய பாராயணங்கள் செய்வது குறித்து ஆச்சர்யத்துடன் கேள்விப்பட்டு நம்மை தொடர் ஆன்மீக சொற் பொழிவு செய்ய அழைக்க, பாபாவின் திருவருட்கருணையால் நிறைவேறியதும் சத்குருவின் சங்கல்பமே.

இந்த நட்பும், அறிய வாய்ப்பும் இன்றளவும் தொடர்கிறது. யார் யாரோட தொடர்பும், நட்பும் எப்பொழுது அமைய வேண்டும், அந்த வாய்ப்பு எவ்விதம் நம்மை ஆன்மீக வழியில் பயணிக்க உதவிட வேண்டும் என்பது சத்குருவின் திட்டம் மட்டுமே.

மற்றுமொரு இனிய சந்திப்பு திருமதி. மாதங்கி பாலாஜி மூலம் நிகழ்ந்தது. ஆம் ஒருமுறை நாங்கள் ஸ்ரீராம் பாபாவுடன் ராதா ஸ்ரீனிவாசன் வீட்டு சத்சங்கம் செல்வதற்காக சென்றபொழுது உடன் வந்து அறிமுகமானவர். திரு. ஆனந்த், பெங்களூர் வாசி. ஆன்மீகத்தில் அழுத்தமான பிடிப்பு உள்ளவர். பெங்களூரு வரும்போது வீட்டுக்கு வாருங்களேன் என மரியாதை நிமித்தமாக அழைப்பு விடுத்தார். இது ஒரு சாதாரண நிகழ்வு தானே. ஆனால் இதன் Opening தொடர்ந்தது.

ஒரு சத்சங்கம் அவர்கள் இல்லத்திலேயே நிகழ்த்த ஓரிரு வாரங்களில் நானும் மாதங்கியும்



சென்றோம். அவர்கள் பெங்களூர் இல்லத்திற்கு சென்ற பொழுது, ஆனந்த் மனைவி பிரகதி அவர் களும், ஆனந்தின் அம்மா மற்றும் குழந்தைகள் அனைவரும் மிகுந்த நட்புடன் உபசரித்தனர். அவர்கள் வீடே தெய்வீகமாய் ஜொலித்தது. சத்ய சாய் பகவான் சான்னித்யம் மிக பிரத்தியக்ஷமாய் இருந்தது.

என்ன ஒரு திருவருட்கருணை. ஆனந்தின் தாயார் தனது ரிட்டயர்மெண்ட் பணத்தில் ஷீர்டி பாபாவிற்கு புட்டபர்த்தி அருகே ஆலயம் நிர்மாணித்திருக்கிறார். அவர்கள் நல்ல ஒரு நட்பு வட்டாரத் துடன் சுமார் 25 பேருக்கு மேல் சத்சங்கத்தில் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். சாய் பஜன், பூஜை யுடன் தொடங்கிய சத்சங்கம் விருவிருப்பாக மாதங்கியின் ஆன்ம ஞான கருத்துக்களுடன் பிரமாதமாய் அனைவர்க்கும் ஆனந்தமாய் நடந்தது. இரவு சுமார் 9.30 மணிக்கு மேல் பிரசாதம் விருந்துடன் நிறைவாய் முடிந்தது.

அனைவர்க்கும் பூரண திருப்தி. இது போன்ற வாய்ப்புகள் மீண்டும் மீண்டும் வேண்டும் என வந்திருந்த அனைவரும் விரும்பினர் நாங்களும் தான்.

எல்லோரும் சென்ற பின்னரும் நாங்கள் ஆனந்த் மற்றும் திருமதி பிரகதியுடன் பேசிக்கொண்டிருந் தோம். பிரகதி அவர்கள் என்னிடம் “அங்கிள்.. நான் சமையல் செய்வதில் தீவிரமாய் இருந்ததில், விஷயங்களை கவனமாக கேட்க முடியவில்லை, எனவே மீண்டும் ஒரு முறை எனக்காக சொல்லுங்கள் ‘ என தொடர்ந்து விடியற்காலை 4 மணி வரை நீண்டது சத்சங்கம். அவர்கள் மகனும் ஸ்பெஷல் வகுப்பு முடிந்து இரவு சுமார் 11 மணிக்கு வந்தமர்ந்து அமர்க்களமாய் கீர்த்தனை பாடினார். 10 வயசு இருக்கலாம்.. ஆனால் அவ்வளவு அருமையான குரல்வளம்.

நானும், பிரகதி அவர்களிடம் இந்த குழந்தையின் அபூர்வமான இசை ஞானத்திற்கு வாய்ப்புகள்

ஏற்படுத்தி மேடை ஏற்ற வேண்டாமா என விசாரிக்க, அவர்கள் எப்படி செய்வது, படிப்பு இடையூறு இன்றி செய்ய வேண்டுமே என கவலை தெரிவித்தனர். நானும் அவர்களை பெங்களூரு கன்டோன்மென்ட் சமிதி – சாய் கீதாஞ்சலி ஆலயம் சென்று சத்ய சாய் பகவானுக்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்தேன். சாய்ராம் அவர்கள் வேண்டுகோளை பரிசீலித்து அவர்களுக்கு "குல்தீப் பாய்" எனும் ஆன்மீக இசை அமைப் பாளரை அறிமுகம் செய்வித்து, இளம் 'ஸ்ரேயாஷ்' க்கு சிறப்பாக பயிற்சி அளித்து அவரது குழுவில் கீர்த்தனைகள் பாடி வீடியோக்கள் வெளி வருகிறது. இது போன்ற நிகழ்வு களில், ஒரு சிறிய பார்வையாளர் எனும் வகையில் கிடைத்த பங் களிப்பு எம்மை வியக்க வைக்கிறது.


என்ன ஒரு அற்புதமான ஆன்மீகப் பயணம் மற்றும் சாய் பாபாவின் விலை மதிப்பற்ற பரிசாக அவரது பக்தர்கள் அறிமுகம், அந்த உயர்ந்த ஆன்மாக்களுடன் நெருக்கமான தொடர்பு என வியப்பான ஆனந்த அனுபவங்கள் ?மீண்டும் தொடர்வோம் இந்த முடிவற்ற அற்புதங்களை அடுத்த இதழில். சத்குருவே பரம சத்யமும் பரம நித்யமுமாம் என உணர்ந்து, தெளிந்து போற்றுவோம், பற்றுவோம் சாய் மகராஜின் பொற்றாமரை திருவடிகளை. குரு வாழ்க, குருவே துணை.

(தொடரும்)

சபதத்தை நிறைவேறியது

நாக்பூரைச் சேர்ந்த கோவிந்த் ராவ் கார்டே என்பவர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த தனது மருமகன் குணமடைந்தால், பாபாவின் தரிச னத்திற்காக அவரை ஷிரிடிக்கு அனுப்புவதாக சபதம் செய்திருந்தார். மருமகன் இரண்டு நாட்களில் குண மடைந்தார், ஆனால் கோவிந்த்ராவ் தனது சபதத்தை மறந்துவிட்டார்.

சிறிது நாட்கள் கழித்து மருமகன் தனது மாமாவைப் பார்க்கச் சென்ற போது, அவர் அதே நோயால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அன்று வியாழக்கிழமை என்பதால், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பிரார்த்தனை செய்து பஜனைகளைப் பாடினர். கோவிந்த்ராவின் குண மடைய பாபாவிடம் அவர்கள் கெஞ் சினார்கள். அன்று அவர் தனது சபதம் நினைவுபடுத்தப்பட்டது.



அவர் மற்றொரு சபதம் எடுத்து, "பாபா, நீங்கள் என்னை குணப்படுத் தினால், நானும் என் மருமகனும் உங்கள் தரிசனத்திற்கு வருவோம்" என்று கூறினார். விரைவில் அவர் குணமடைந்து, பாபாவுக்கு நன்றி தெரிவிக்க மருமகனுடன் அவசரமாக ஷிரிடிக்குச் சென்றார். சாயி சத்சரித்திரத்தில், அத்தியாயம் 36, கோவாவைச் சேர்ந்த இரண்டு பெரிய மனிதர்களின் கதையையும் அவர்களின் சபதங்களை நிறைவேற்று வதையும் விவரிக்கிறது. ●

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

13



ஹேமலேகை கூறியவற்றை கேட்ட ஹேமசூடன் பின்வருமாறு வினவினான். "பிரியமானவளே! நீ கூறுகின்ற நிர்குணப்பிரம்மத்தை என்னால் அடையாளம் காணமுடியவில்லை. மதபேதங்களால் பிளவுற்று, பற்பல உருவங்களை கடவுளாக உருவகித்து, அதற்கு சிவன், விஷ்ணு, கணேசன் முருகன் என்றும் இன்னும் சிலர் சூரியன் மஹாகாளி, மகாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி என்றும் இந்த பட்டியலானது நீண்டுகொண்டே செல்கிறது.

இதில் எவரை பிரம்மம் எனக் கொள்வது நாம் வளர்ந்தவிதமானது சகுனப் பிரம்மத்தை அனுசரித்தே அல்லவோ? வேறுசில கற்றறிந்த வர்களோ பிரம்மம் என்பது கண்ணுக்குத் தெரியாத அணுவென்றும், பிராணன் என்றும் கூறுகின்றனர். நீ கூறிய பிரம்மத்தின் சொரூபமானது இப்படியெல்லாம் அநேகமாக கூறப்பட்டுள்ளது. இவர்களில் எவரிடம் என்மனதை லயிக்கச்செய்வது? இதற்கான வழியை உன்னால் மட்டுமே கூற முடியும் என்றுநான் கருதுகின்றேன், அதனால் உன்னிடம் கேட்கின்றேன்" என்றான் ஹேமசூடன்.

ஹேமசூடன் கூறிய வார்த்தை களை கேட்ட ஹேமலேகை மகிழ்ச்சி பொருந்தியவளாய், "அரசே! உங்களுக்கு பிரம்மத்தின் சொரூபவர்ணையை சொல்லு கின்றேன் பொறுமையாக, கவனத் துடன் கேளுங்கள். இந்த உலகத் தின் உற்பத்திக்கும், முடிவுக்கும் காரணமானது பிரம்மமே. அதுவே, பலவாக பரிமளிக்கிறது. இந்த



நாராயணன்

பிரம்மம் எல்லாவற்றிலும் எல்லாமாகவும் ஏன் நம்முள்ளும் உள்ளது. அதனால் தான், "அகம் ப்ரஹ்மாஸ்மி" "நானே கடவுள்" என்றுரைக்கப் படுகின்றது. இங்கு "நான்" என்பது "ஆன்மா" உடம்பு அல்ல என்ற புரிதல் வேண்டும். அதுவே ஞானம்.

ஆனால், நீங்கள் கூறும் உருவத்திற்குள் அடங்குகின்றவன் பிரம்மம் அல்ல. இந்த பிரம்மம் சர்வவியாபி, எங்கும் நிறைந்தவன், எதிலும் உறைபவன். ஓர் உயிர் தொடங்கி அனைத்திலுமாய் இருப்பவன். அவனை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததற்கு சமம், அதுவே நம் தேடலாகவும் இருக்க வேண்டும். அதற்காக அருளப் பட்டதே இந்த மானிடப்பிறவி.

இதன் உண்மையை விளக்கு கிறேன் கேளுங்கள். சைவர்கள் பிரம்மத்தை முக்கண் மூர்த்தி, ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவன் என்றார்கள். வைணவர்களோ பாற்கடலில் ஆதிசேஷனில் பள்ளிகொண்டிருக்கும் மஹாவி ஷ்ணு என்கிறார்கள். சாக்தர்களோ மஹாசக்தி, ஆதிபராசக்தி, ஜகன்மாதா என்கிறார்கள்.

இப்படியாக இவர்கள் பிரம் மத்தை தாங்கள் அபிமானிக்கின்ற தேவதையாக உருவத்துக்குள் அடக்குகிறார்கள். ஆனால், பிரம்மம் இவைகளுக்கு அப்பாற் பட்ட ஒன்று என்பதனை அவர்களால் அறிய முடியவில்லை. இவ்விதமாக இந்த பிரம்மத்தை கண்ணிற்குத் தெரிகின்ற உடல் உடையவனைப்போல பாவித்து வழிபாடு செய்கிறார்கள். ஆனால், எல்லா உயிர்களிலும் காணப்படுகின்ற பிரம்மத்தை கவனியாமல், ஜீவஹிம்சை செய்து துன்புறுத்துகிறார்கள்.

பிரம்மம் பூரணமானது, முழுசுதந்திரம் உடையது, அது உருவத்திற்குள் அடங்குவது அன்று. அதுமட்டுமல்லாமல் இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பும், அடங்கிய பின்பும் பிரம்மம் இருக்கக் கூடியது. இந்த பிரம்மமே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளிச்செயல் இவை யனைத்தையும் செய்கின்றது. இந்திரியம், புத்தி, மனம், அகங்காரம் இவையாவையும் கொண்ட மனிதன் தன் எண்ணத்திற்கும், அறிவிற்கும் தக்கவாறு அவர்களுக்கு விருப்பமான உருவத்தினை படைத் தது அதுவே பிரம்மம் என்கின்றனர்.

ஆனால், இந்த பிரம்மமானது இவையெல்லாவற்றிற்கும் மேலானது என்பதனை அறிய மறந்து விடுகிறான். அதாவது, "கண்ணா டியில் தன் முகத்தை காணும் ஒருவன் அவனது பிரதி பிம்பத்தையே கவனித்துக்கொண்டு கண்ணாடியை கவனிக்காமல் தவற விடுவதைப்போன்று, இந்த மூடர்களும் இந்த உலகத்தையும், தான் அபிமானிக்கின்ற உருவத்தையும் மட்டுமே கவனித்துக்கொண்டு பரபிரம்மத்தை அறியாமல் தவற விடுகின்றார்கள்.

பரபிரம்மம்மானது உருவமற்ற

ஏகனாக இருப்பதினால், அந்த பரபிரம்மத்தை சிவன், விஷ்ணு, சக்தி, இந்திரன் என்ற உருவபேதத்தினால் அவர் சிறந்தவர், இவர் சிறந்தவர், அவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் என்றெல்லாம் பேதபுத்தி கொள்பவன் அறிவற்றவன் ஆவான்.

ஆகையால், ஸ்திரமான மனமுடைய இராஜகுமாரரே! அந்த உருவமற்ற பிரமத்தை குறித்து தியானம் மேற் கொள்ளுங்கள். அது முடியவில்லை என்றால் எந்த உருவத்தின் மீது மனமானது லயிக்கின்றதோ அதன்மீது மட்டுமே பக்திசெய்து, முயற்சியினால் அந்த உருவத்தையே காலப்போக்கில் தியானமாகிக்கொண்டு மேன்மை நிலைக்கு வர முயலவேண்டும். இந்த தியானயோகமாகிய மெய்ஞானத்தைத் தவிர கோடி ஜென்மம் எடுத்தாலும் இறை நிலையை அடைய வேறுகதியில்லை என்பதை அறிவீர்களாக, என்று கூறிமுடித்தாள்.

ஸ்ரீதத்தாத்ரேயசுவாமி, பரசுராமருக்கு கூறிய இதே கருத்தினை பகவான் ஸ்ரீரமண மகரிஷி, கீழ்கண்ட பாடல் வரிகளின் மூலமாக மிகஅழகாக விளக்குகின்றார்.

அறியாமை யான்மறை வானதுபோ
லான்மா வறவேஃ தேகம தாகி நிறைவா
யிலகுமே தானா யிரியவே மேக
மிலகுமோ தித்த னென வே.

நம்மிடமுள்ள அஞ்ஞானமாகிய அறியாமையால் ஆன்மாவானது பலவாக காட்சியளிக்கிறது. அஞ்ஞானம் அழிந்து ஞானஒளி ஒளிரும் போது அது ஒன்றுதான் என்று தெரிந்துவிடும். சூரியனானது எப்போதும் ஒளிவீசி பிரகாசித்துக் கொண்டே தான் இருக்கிறது, ஆனால் மேகமானது மறைக்கும் போது சூரியன் இல்லை என்று கூறுகிறோம். மேகமூட்டம் நீங்கும்போது எப்போதும் ஒளிரும் சூரியன் நமக்கு விளங்கிவிடுவான்.

அதுபோல, எப்போதும் எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஆன்மா அஞ்ஞானத்திரையின் காரணமாக மறைக்கப்படுகிறது. அஞ்ஞானம் விலகி ஞானம் ஒளிரும்போது ஆன்மாவானது எப்போதும்போலப் பிரகாசிக்கின்றது. இதன்மூலம் ஞானத்தால் மட்டுமே அஞ்ஞானத்தை போக்க முடியும், அதைவிட்டு எத்தகைய கர்மங்களை செய்தாலும் அறியாமை விலகுவதில்லை என்பது பகவானால் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

ஹேமலேகை, சொன்ன இக்கதையை தன் சிஷ்யனிடம் கூறிய குருதேவர், "மகனே! கவனமாகக் கேட்ட இக்கதையின் உட்பொருள் என்ன? உனக்கு விளங்குகின்றதா? ஆத்மாவையும், ஆத்மா கொடுத்த புத்தியையும் சரியாய் அறிந்துகொண்டு வாழத்தவறிய இந்த ஜீவன் கடைசியில் மரணம் என்ற சங்கடமான நிலைக்கு தள்ளப்படும். இதுவே, ஜீவன் தனக்கு கொடுக்கப்பட்ட புத்தியை சரியானமுறையில் பயன்படுத்தி விசாரம் செய்து, தனக்கு நன்மையை மட்டுமே நினைத்த ஆத்மாவை உணரத்தலைப்பட்டு வாழ்ந்திருந்தால் மரணமில்லா பேரின்பநிலையை அடைந்திருக்கலாம் என்பதாகும்.



"மகனே ஒன்றை புரிந்துகொள்! சத்வகுணமே புத்தியின் நிலை. ஆனால், புத்தியிடம் உள்ள அறியாமையினால், ஜீவன் ஆத்மாவிடம் இருந்து பிரிக்கப் பட்டு, இந்த அறியாமையின் ஆளுமை காரணத்தினால் பலவித மான எண்ணக்கூட்டத்தில் சிக்கித் தவித்து ஆசை, மோகத்தால் ஆட்டுவிக்கப்பட்டு எப்படிபட்ட நிலைக்கு இறுதியில் தள்ளப்பட்டது என்பதை பார்! மனமே நம் நண்பனும், எதிரியும் ஆகும்.

எவனொருவன் மனதிற்கு தவம், தியானம் என்ற கடிவாளம் பூட்டி பிரயாணத்தை ஆரம்பிக்கிறானோ இறுதியில் அவன் ஆத்மஞானம் என்கிற சரியான இலக்கை அடைந்து மௌனம் என்ற பேரானந்த வீட்டில் வாழ்கின்றான். மனிதனிடமுள்ள இந்த ஆசை பலமடைய பலமடைய புத்தி தடுமாற ஆரம்பிக்கிறது, முடிவில் ஜீவன் மூடத்தனமான செயல்களை மட்டுமே செய்து தானே தன் துக்கத்திற்கு காரணன் ஆகின்றான்"என்று கூறினார்.

இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் "அந்தக்கரணம்" என்றழைக்கப்படு கின்றது. மனம் தன் கற்பனை சக்தி யினால் அவைகளை அனுபவிக்க ஏதுவாக மெய், வாய், கண், காது, மூக்கு என்ற ஐந்து ஞானேந் திரியங்களினால் உலக விஷயங் களை தொடர்பு கொண்டு அதன்மூலமாக, இன்பம், சுவை, ஒளி, ஓசை, நாற்றம் போன்ற அனுபவங்களை அனுபவிக்கின்றது. இவ்வாறாக புலன்களின் வாயிலாக அனுபவித்த விஷயசுகங்களை சிந்தித்து அவற்றில் சிலவற்றை பதிவுகளாக சிந்தையில் பதித்துக் கொள்கின்றது.

பின்னர் அந்தச்சில பதிவுகளை மீண்டும் மீண்டும் நினைவூட்டி விஷயசுகங்களை அனுபவிக்க நினைக்கிறான் ஜீவன். அதன்மூலம்

இன்பம் அடையவிழைகிறான். ஆனால், அவனுக்கு எவ்வளவு முறை அனுபவித்தபோதும் ஆசைகள் நிறைவேறி அடங்காமல் மனமானது அலைக்கழிக்கப்படுகின்றது. இவ்வாறு, விஷயசுகங்களின்பால் அலைக்கழிப்பட்டு ஆசைகள் நிறைவேறாமல் வெறுப்பிலும், கோபத்திலும் இந்த ஜீவன் கொந்தளிக்கின்றது.

இதனால் மனமானது துக்கத்திற்கு ஆளாகி அது புத்தியை பாதிக்கிறது. மனத்திடமிருந்து பெறப்பட்ட சத்வ, ரஜஸ், தமஸ் என்ற குணபேதங்களில் சத்வ குணம் மனத்தினின்று விலகி, ரஜோ மற்றும் தமோ குணமானது மேலோங்குகிறது. ரஜோ மற்றும் தமோ குணங்களில் உழலும் புத்தியானது சதாசர்வகாலமும் துக்கத்திலேயே தத்தளிக்கின்றது. இங்கு புத்திக்கு விசாரம் இல்லாத காரணத்தினால் ஜீவனுக்கு நன்மை புரியமுடியவில்லை.

விசாரம் இல்லாத புத்தியானது தன்னுள் அழுக்குளை சேர்த்துக் கொண்டு ஜீவனை மாசுபடுத்துகின்றது. இது ஜீவனின் அறியாமையே ஆகும். ஜீவன் தன்னுடைய இணைபிரியாத ஆத்மாவின் தொடர்பினிலிருந்து விலகுவதால் மற்ற அந்தக்கரணம், ஞானேந்திரியம், மனம் ஆகிய அனைத்தும் அழுக்கான புத்தியின் சொற்படி விஷயசுகங்களிலேயே இன்பம் காணமுற்பட்டு முடியாமல் உடம்பையே "நான்" என்றெண்ணி, உலகத்தையும், சுற்றத்தையும் "தன்னுடையது" என்று கருதி இறுதியில் ஆத்மாவை உணராமலேயே ஜீவனின் வாழ்க்கை முடிந்துவிடுகிறது.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமில்லையோ, அதுபோல தோற்றங்கள் அனைத்துமே ஆத்மாவின் பிரதிபலிப்பேயாகும். இந்த ஞானம் ஜீவனுக்கு உண்டாகிவிட்டால், அவனுக்கு துக்கம் என்பதே கிடையாது. புத்தியின் சேர்க்கையினால், ஜீவன் சுக, துக்கத்தில் இருப்பதாக தோன்றினாலும் அதுவும் ஆத்மாவின் பிரதிபலிப்பே என்பதே உண்மை, அது பரமாத்மாவேயன்றி வேறில்லை என்பது புரிந்தால் ஜீவாத்மா பரமாத்மா பேதமானது மறையும்.

இவ்வாறாக, பலகாலம் அவதிப்பட்ட புத்தியானது விசாரத்தின் மூலம் விவேகமடைந்து வைராக்கிய மனதைப் பெற்று, ஆசைகளை அடக்கி, மோகத்தை கடந்து, எண்ணங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட நிலையில், ஜீவனானது ஆத்மாவோடு தொடர்பை பலப்படுத்திக்கொண்டு பரமானந்தத்தை அனுபவிக்கின்றது. எனவே, பந்தம், துக்கம், மகிழ்ச்சி, முக்தி போன்ற அனைத்தும் புத்தியின் அறியாமையேயாகும். உண்மையில் ஆத்மாவின் பிரதிபலிப்பே ஜீவாத்மா ஆகும். அதற்கு, பிறப்பு இல்லை, இறப்பும் இல்லை, மகிழ்ச்சி இல்லை, துக்கமும் இல்லை. இவையாவும், புத்தியிடம் உள்ள அறியாமையின் விளையாட்டேயாகும். இவ்வாறு, ஹேமலேகை கூறிமுடித்தாள்.

தொடரும்

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"



பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்

புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு: 9941816692.


SAI DHYANALAYA



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

12.04.26 அன்று நடைபெற்ற “தன்வந்திரி ஹோமம்” நிகழ்வுகள்:





















சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

அய்யா வைகுண்டசுவாமி



கி.பி.1809–ஆம் ஆண்டு இந்தியாவின் தென்கோடியான குமரி மாவட்டத்திலே தாமரை குளம் என்னும் சிற்றூரில், பொன்னு நாடார், வெயிலாள் தம்பதியருக்கு மகனாக ஒரு குழந்தை பிறக்கிறது. தாழ்ந்த சாதியாக கருதப்படும் சாணார் இனத்திலே, ஏழை குடும்பத்தில் பிறந்த அக்குழந்தைக்கு 'முடிசூடும் பெருமாள்' என்று பெயர் சூட்டுகிறார்கள். மேல் சாதியினரின் தூண்டுதலால் அப்பகுதியை ஆண்டு வந்த திருவிதாங்கூர் மன்னன் இப்பெயரை சூட்டியதை எதிர்த்ததால் குழந்தையின் பெயர் 'முத்துக்குட்டி' என்று மாற்றப்பட்டது.

முத்துக்குட்டி தெய்வீகத்தில் ஆர்வம் உடைய சிறுவனாக வளர்ந்து வருகிறான். அவன் சிறந்த விஷ்ணு பக்தனாவன். அவன் தனது வீட்டில் அவருக்கென்று ஒரு பீடம் அமைத்து வழிபட்டதாக ஆகிலத் திரட்டு கூறுகிறது. அவனுக்கு பதினேழு வயதில் திருமணம் நடக்கிறது. பக்கத்து ஊரான புவியூரைச் சார்ந்த ஏற்கனவே திருமணம் ஆகி கைம்பெண்ணான திருமாலம்மாள் என்னும் மங்கையை மணக்கிறார். முத்துக்குட்டி பனைத் தொழிலும், விவசாயமும் செய்து வாழ்ந்து வருகிறார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் அவர் தனது இருபத்து இரண்டாவது வயதில் நோய்வாய்ப்பட்டு இரு வருட காலமாக அவதியுற்று வருகிறார். ஒரு நாள் முத்துக்குட்டியின் தாயாரான வெயிலாள் ஒரு கனவு காண்கிறார். அக்கனவில் நாராயணர் தோன்றி அவளது மகனை மாசி மாதம் திருச்செந்தூர்

யோகி ஸ்ரீராம் பாபா

முருகன் கோவிலில் நடைபெறும் விழாவுக்கு கொண்டு வந்தால் குணப்படுத்துவதாகக் கூறுகிறார். அதனால் வெயிலாள் சுற்றத்தார் சூழ முத்துக்குட்டியை ஒரு தொட்டி லில் வைத்து சுமந்து செல்கிறாள். அங்கே கடலருகே சென்றதும் அவர் எழுந்து வேகமாக நடந்து கடலுக்குள் சென்று விடுகின்றார்.

ஒரு நாள் காத்திருந்த பிறகு அனைவரும், போனவர் வரமாட் டார். அவர் இறந்து விட்டார் என்று ஊர் திரும்பினார்கள். ஆனால் தாய் வெயிலாள் மட்டும் அழுதழுது கடற்கரையில் அமர்ந்திருந்தார். மூன்றாம் நாள் வைகுண்டர் கடலிலிருந்து வெளிப்படுகிறார். வெயிலாள் ஓடிச் சென்று தனது மகனை கட்டி அணைக்கச் செல்கிறாள். ஆனால் அவர் அவளை தடுக்கிறார். மேலும் தாம் கலியை அழிக்க வைகுண்டராக உலகில் அவதரித்திருப் பதாகவும் கூறுகிறார். ஆனால் தாய்ப் பாசம் காரணமாக அவரை வெயிலாள் தனது மகன் முத்துகுட்டி என்றே பார்க்கிறாள். அவளுக்கு தனது நிலையை வைகுண்டர் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்,

“ஆண்டாயிரத்து எட்டு முன்னே அன்னை எனவே நீயிருந் தாய் கூண்டாம் எட்டம் மாசியிலே குணமாய் நாராயணர் மகவாய் சான்றோர் கதிகள் பெற்றிடவே தர்மகுண்டம் பிறந்து வொரு குன்றாக் குடைக்குள் அரசாளக் கொண்டே போறேன் கண்டிரு நீ”

ஆனால் அதை ஏற்றுக் கோள்ளும் நிலையில் வெயிலாள் இல்லை. தாய்ப் பாசம் தடுக்க, அவளால் வைகுண்டரின் ஞான நிலையை அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே, வெயிலாள் இவ்விடத்திலேயே விழுந்து இறந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. வைகுண்டர் கடலிலிருந்து அவதரித்த இடம் அய்யாவழி சமயத்தின் புனிதத் தலங்களுள் ஒன்றாகும். அவதாரப் பதி என்று அழைக்கப்படுகிறது.

அங்கிருது தெட்சணம் எனப்படும் பூவண்டன் தோப்பை (தற்போதய சுவாமி தோப்பு) அடைந்த வைகுண்டர் ஆறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அவர் மூன்று நிலையில் தவம் மேற்கொண்டதாக அகிலத் திரட்டு கூறுகிறது. மூன்று நிலைகளும் மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த நோக்கங்களை கூறும் போது அகிலத்திரட்டு,

“முதற்றான் தவசு யுகத்தவசு என்மகனே தத்தமுள்ள இரண்டாம் தவசு சாதிக்காமே மூன்றாம் தவசு முன்னுரைத்த பெண்ணாட்கும் நன்றான முற்பிதிரு நல்ல வழிகளுக்கும்“

மேலும் தவத்தின் இருப்பு முறையும் நிலைக்கு நிலை மாறுபட்டதாக கூறப்படுகிறது. முதல் இரண்டு வருடங்களும் அவர் ஆறு அடி குழியிலும், அடுத்த இரண்டாண்டுகள் தரையிலும், கடைசி இரண்டு ஆண்டுகள் உயர்ந்த மேடையிட்டு தவம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் அவர் தவம் புரிந்த கால கட்டத்தில் பச்சரிசிப் பால் அல்லாது வேறெந்த உணவு



உட்கொள்ளவில்லை குறைவாகப் பேசினார்.

அய்யா வைகுண்டரின் அவதார நோக்கத்திற்கு முக்கியமானதாக தீய சக்திகளை அழிப்பதே என்று அகிலத் திரட்டு அம்மானை கூறுகிறது. இவை அய்யா தவம் இருந்த காலகட்டத்தில் நடந்தவைகளாகும். வைகுண்ட அவதாரத்தின் மூலம் அனைத்து தீய சக்திகளும் எரிக்கப்படுகின்றன.

"உகசிவ வானோர் எல்லோரும் பாகரிது வகையுடன் நாந்தான் செய்யும் வழிதனை பார்த்துக்கொள்ளும் இகபரன் முதலாய் இங்கே இரும் எனச் சொல்லிவைத்துப் பகைசெய்த கழிவை எல்லாம் எரிக்கவே பரனங் குற்றார்"

அய்யா தவம் இருந்த வடக்கு வாசலில் இச்சம்பவம் நடைபெறுகிறது. அய்யாவை தரிசிக்க வந்திருந்த மக்களிலே சிலரின் உடம்புகளில் பேய்களை ஆட வைக்கிறார் அய்யா. பின்னர் அவர்களின் சக்திகளை ஒப்படைத்து தீயிலே தங்களை மாய்த்துக் கொள்வதாக சத்தியம் செய்யவைக்கிறார். இவ்வாறன அய்யாவின் கட்டளைகளுக்கிணங்கி அவை சத்தியம் செய்ததும் பேயால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தரையில் விழுகின்றனர். இவ்வாறு பேய்கள் எரிக்கப்படுகின்றன.

பேய் பிடித்தவர்களையும், பேய் ஓட்டுபவர்களையும் அழைத்துவந்து அய்யா தவம் இருந்த சுவாமிதோப்பிலே மக்கள் முன்னிலையில் தங்கள் சக்தியனைத்தையும் வைகுண்டரிடம் ஒப்படைத்து உறுதிமொழி அளிக்க செய்தாக அகிலம் கூறுகிறது. அய்யாவின் இச்செயலை

மக்கள் மிகுந்த ஆச்சிரியத்துடன் கண்டுகளித்தனர். இச்செயல் அவர்கள் மனதில் வைகுண்டர் மீது மிகுந்த பக்தியை உருவாக்கியது. அவர்கள் அய்யாவை வைகுண்ட சுவாமி என அழைக்கலாயினர். பேயை எரித்த வைகுண்டர் சுற்றி இருந்த மக்களை பார்த்து கீழ்க்கண்டவாறு கூறினார்,

"பொய்யில்லை பசாசில்லை பில்லியின் வினைகளில்லை நொய் யில்லை நோவுமில்லை நொன்பலத் துன்பமில்லை தொய்வில்லை இறை களில்லை சுருட்டும் மாஞால மில்லை மையில்லை உலகத்தோரே வாழும் ஒரு நினைவாலென்றார்"

வைகுண்டரின் புகழ் தென் திருவிதாங்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மிகவேகமாகப் பரவியது. அவர் சமுதாயப் பார்வையில் ஒரு அற்புத சக்தி படைத்த மனிதராக அறியப் பட்டார். மறுபுறம் சமய நம்பிக்கை யின் அடித்தளத்தில் பண்டாரமாக அறிவிக்கப்பட்டார். அகிலத்திரட்டு அம்மானை அவரை நாராயண பண்டாரம் என விளம்புகிறது.

நாட்டுமக்கள் இவரது போதனைகளை கவனிக்க இவர் முன்னிலையில் கூடினார்கள். மேலும் அவர் அவர்களது நோய்களைத் தீர்த்ததனால் அவரை மக்கள் வழிபடத்தொடங்கினர். வைகுண்டர் அவர்களை சாதி வேறுபாடின்றி ஒரே கிணற்றில் குளிக்க போதித்தார்.

மேலும் அவர்களை அனைத்து பேதங்களையும் கடந்து சமபந்தி உண்ணவும் போதித்தார். இந்தியாவின் முதல் சமபந்தி அய்யாவழி சமயக் கூடல்களில் தான் அமைக்கப்பட்டதாக கருதப்படுகிறது. அய்யா மக்களுக்கு பல போதனைகளை வழங்கினார். அவற்றில் முக்கியமானதாக, அவர் நடக்கும் கலியுகத்தை அழித்து பேரின்பநிலையான தர்மயுகத்தை மலரச்செய்து சான்றோருக்கு நித்திய வாழ்வை அளிக்கப் போவதாக கூறினார்.

மறுமை தர்மமான அந்நிலையை அடைய "தாழக் கிடப்பாரை தற்காப்பதே தர்மம்" என்னும் கோட்பாட்டை ஆதார



மாக வைத்துச் செயல்பட மக்கள் அவரால் அறிவுறுத்தப்பட்டனர். மேலும் அவரின் அவதார செயல் பாடுகள், சமுதாயப் பார்வையில் இக்கோட்பாட்டையே மையமாக வைத்தே சுழல்வதைப் பார்க்க முடிகிறது. சான்றோராகிய மக்கள் தர்மயுக வெளிப்படலுக்கு முக்கிய பங்கு ஆற்ற வேண்டியவர்களாக அறிவுறுத்தப்பட்டனர்.

அவர்கள் தங்களை தர்மயுக மக்களாக மாற்ற சில முறை களை கடைபிடிக்க அய்யா வளியுறுத்தினார். இவ்வாய் மொழி களில், மக்கள் தங்களை சுயமரியாதை உடையவர்களாக, மானமுடை யவர்களாக, அச்சமற்றவர்களாக, மாற்றிக்கொள்ளும் போது, கலி தன்னால் அழிந்துகொண்டே வரும் என்பது முதன்மைபெற்றது. இங்குள்ளவை அனைத்தும் ஒன்றாத லால் எதற்கும் அச்சமில்லை என்னும் அத்வைத கோட்பாடடை ஒத்திருந்தது இது. மக்கள் கலியாகிய மாயை விட்டகலுமளவு வைகுண்டர் தர்ம ராஜாவாக இருந்து அவர்களை ஆளும் இத்தர்ம யுகத்தை உணரமுடியும் என்னும் அகிலக் கோட்பாடு இதை உறுதி செய்கிறது.

அய்யாவின் புகழையும் அவரைச் சுற்றி திரளும் ஆயிரக்கணக்கான மக்களையும் கண்டு பொறையுற்ற சில மேட்டுகுடியினர் அப்பகுதியை ஆண்டு வந்த திருவிதாங்கூர் மன்னன் சுவாதி திருநாளிடம் புகார் செய்ததாக தெரிகிறது. இதன் பெயரில் மன்னன் வைகுண்டரை கைது செய்து சிறைப்படுத்தினான்.

சிறிது கால சிறை வாசத்துக்குப் பின்பு சிறையிலிருந்து விடுவிக்கப் பட்ட வைகுண்டர் சான்றோர் மக்களால் வாகனம் மூலம் சாமித் தோப்பிற்கு அழைத்து வரப்பட் டார். பின்னார் சான்றோர் மக்களை பக்குவப்படுத்த புற மற்றும் அகத்தூய்மையை அளிக்கும் துவையல் தவசு எனப்படும் தவமுறையை செயல் படுத்த 700 குடும்ப மக்களை வாகைப்பதிக்கு அனுப்பிவைத்தார். மேலும் பல அவதார நோக்கத்தை நிறைவேற்றினார்.

பின்னர் வைகுண்டரை சான்றோர் தங்கள் வீடுகளுக்கு விருந்துக்கு அழைத்ததாக மரியாதை செலுத்தினர். அவர் வாகனத்தில் சான்றோரால் சுமந்து செல்லப்பட்டார். இவ்விருந்து களின் போது அவர் அந்தந்த இடங்களில் நிழல் தாங்கல்களை அமைத்துக் கொடுத்ததாக கூறப்படு கிறது.

வைகுண்டர் ஐவரை சீடர்களாக தேர்ந்தெடுத்தார். அவர்களுள் ஒருவரான அரி கோபாலன் சீடர் மூலமாகவே அய்யாவழியின் முதன்மைப் போதனை நூலாகிய அகிலத்திரட்டு அம்மானை எழுதப்பட்டது. வைகுண்டர் 1851– ஆம் ஆண்டு ஜூன் மாதம், திங்கட்கிழமையில் வைகுண்டம் சென்றார். அவர் எடுத்த அவதார உடல் தற்போது சுவாமிதோப்பு பதியில் பள்ளியறையாக இருக்கும் இடத்தில் மண்ணறையில் வைக்கப்படுகிறது.

மகான்களை தொழுவோம்! மகத்துவம் நிறைந்த வாழ்வைப் பெறுவோம்!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.03.26

புரிகின்ற மாதிரி கூறலாம். எப்படி புரிந்து கொள்வது என்று கூற முடியாது.

02.03.26

உன்னைப் பற்றி நீ அறிந்தது எல்லாம் மற்றவர்கள் உன்னைப் பற்றி கூறியதே! உண்மையில் நீ யார் என்று சிந்தித்துப் பார்.

03.03.26

தியானம் மட்டுமே ஆன்மீகத்தின் நேரான பாதை. தியானிப்பவன் மட்டுமே இந்த பூமிக்கு உரிமை உள்ளவன்.

04.03.26

ஆன்மீக வாழ்வில் நிகழும் சூட்சுமங்கள் பகுத்தறிவிற்கு அப்பாற் பட்டது. அதை அறிந்து கொள்ள முடியாது. உணரத்தான் முடியும்.

05.03.26

இக்காலத்து அறிவியல் உனக்கு ஆசைப்பட்டதை எல்லாம் கொடுக்கும். ஆனால் தியானம் ஆசை என்றால் என்னவென்று கற்றுக் கொடுக்கும்.

06.03.26

தங்களது எண்ணங்கள் நிறை வேறவே பெரும்பாலான மனிதர்கள் கடவுளை வழிபடுகின்றனர். ஒரு சிலரே கடவுளை உணர வேண்டும் என்று வாழ்கின்றனர்.

07.03.26

எதன் வழியாகவும் எதையும் அடைவதல்ல ஈடுபாடு. எதை அடைய வேண்டுமோ அதுவாகவே மாறி விடுவதுதான் ஈடுபாடு.

08.03.26

சீடன் தயாராக இருந்தால் சமாதியான குருகூட ஞானம் கொடுக்க முடியும். தயாராக இல்லாத சீடனுக்கு உயிரோடு இருக்கும் குருகூட ஒன்றும் செய்ய முடியாது.

09.03.26

துன்பமாக இருப்பதற்கு எந்த திறமையும் தேவையில்லை. ஆனந்தமாக இருப்பதற்கு அறிவுக் கூர்மை, திறமை, படைப்பாற்றல் ஆகியவை தேவை.

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

10.03.26

நீங்கள் எவரிடமும் அறிவாளி போல் பேசாதீர்கள் உங்கள் முன் இருக்கும் எந்த அறிவாளியும் அதை விரும்ப மாட்டான்.

11.03.26

நாம் விரும்பும் மனிதர்கள் யாரும் நம்மை விரும்புவதில்லை என்று கவலைப் படுபவர்கள், நம்மை விரும்பு மனிதர்களை நாம் விரும்புகின்றோமா என்று யோசித்துப்பாருங்கள்.

12.03.26

உனக்குள் ஒளிந்துகிடக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவதுதான் சுதந்திரம் எனப்படும்.

13.03.26

எவன் ஒருவன் 'தன்னை யுணர்தல்' என்ற ஆத்மஞானம் பெறு கின்றானோ அவனது கர்மவினைகள் அவனைவிட்டு விலகி ஓடும்.

14.03.26

உங்களைச் சுற்றி நடப்பவை களால் நீங்கள் பாதிக்கப்பட்டால் உங்களுக்கு சுய புத்தி இல்லை என்று பொருள்.

15.03.26

பேச வேண்டிய தருணத்தில் மௌனத்தில் இருப்பதும், மௌனத்தில் இருக்க வேண்டிய நேரத்தில் பேசுவதும் தவறு.

16.03.26

தனக்கு தெரியாததை தெரியாது என்று ஒத்துக்கொள்வது அவமானம் அல்ல! தனக்கு தெரியாததை தெரி யும் என்று வாதிடுவதே அவமானம் ஆகும்.

17.03.26

இதைப்படிக்கும் இந்த விநாடி மட்டுமே உண்மை என்று நம்புகின்றவரின் வாழ்க்கையில் துன்பத்திற்கு இடமில்லை.

18.03.26

பிறருடைய அன்பிற்காகவும், பாசத்திற்காகவும் ஏங்கித் தவித்தால் நீ முட்டாள் என்று அர்த்தம். ஏனெனில் நீ எதையும், யாருக்கும் கொடுக்க விரும்பவில்லை. பெறுவ தற்கு மட்டும் விரும்புகின்றாய் என்று பொருளாகின்றது அல்லவா?

19.03.26

நீ எப்பொழுது தேடுதலை நிறுத்து கிறாயோ அப்பொழுதே அது கிடைத்து விடும். ஏனெனில் நீ தேடுவது தொலைவில் இருப்பதாக நினைத்து நீ உன்னை மறந்து போனாய். அது உன்னிட மே உள்ளது என்பதை அறிவாயாக!

20.03.26

தனக்கு முன்பாக ஒருவன் வளர்வதைக் கண்டு எவன் ஆனந்தப்படுகின்றானோ அவன் மாமனிதன்! எனக்கு முன்னால் அவன் வளர்ந்துவிட்டானே என்று பொறாமைப் படுபவன் மனிதன்!

21.03.26

நிறைய சம்பாதிப்பவர்கள் பணக்காரர்களாக வாழ்வதில்லை. கொஞ்சமாக சம்பாதிப்பவர்கள் ஏழைகளாக வாழ்வதில்லை.

22.03.26

ஐம்புலன்களும் பார்ப்பது, கேட்பது, சுவைப்பது, சுவாசிப்பது, உணர்வது என்ற கருவிகளே! இயக்குவது மனமே! எனவே மனதை அடக்க வேண்டுமானால் புலன் இன்பங்களை கட்டுப்படுத்து.

23.03.26

இந்த உலகத்தில் நீங்கள் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு யாராவது, ஏதாவது தேவைப்பட்டால் நீங்கள்

அடிமையாக இருக்கின்றீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள்.

24.03.26

உங்கள் வீட்டு கதவு தட்டப்படும் போது எரிச்சல் அடையாதீர்கள். சில நேரங்களில் நல்ல வாய்ப்புகள்கூட கதவைத் தட்டக்கூடும்.

25.03.26

பற்றின்மை என்ற வைராக்கியம் நம்மிடம் வந்துவிட்டால் வேண்டு தலும் இல்லை. வேண்டாமையும் இல்லை.

26.03.26

முக்தியை விரும்பும் மனிதர்கள் புலன் இன்பங்கள் விஷத்தைவிட கொடியவை என உணர்ந்து தவிர்க்க வேண்டும்.

27.03.26

இவ்வுலகினில் உன்னால் மாற்றக் கூடியதை மட்டுமே மாற்றலாம். மாற்ற முடியாததை சகித்துக்கொள்வதை தவிர வேறு வழியில்லை.

28.03.26

புலனடக்கம் என்பது அனைத்தையும் விட்டுவிடுவதல்ல! புலன்கள் மூலம் கிட்டும் இன்பங்கள் நிலையற்றவை என்பதை உணர்ந்து கொள்வதே "புலனடக்கம்".

29.03.26

தவறு செய்தவர்களை மன்னித்து விட்ட யாரும் ஒருபோதும் மனவருத்தம் அடைய மாட்டார்கள்.

30.03.26

எதையாவது, யாரையாவது குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கும் மனம் கொண்டவர்கள் இறக்கும் வரை அமைதி என்பதை அறிய மாட்டார்கள். ●

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

"ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்"



ஸ்ரீ சத்குரு சாய் பகவானின் பேரரு ளாலும், ஆசியாலும் நமது குருவும் ,குண்டலினி யோகியும், மௌனோப தேசினியும், வழிகாட்டியுமான யோகி ஸ்ரீராம் பாபாவின் பெரு முயற்சியினால், சாய் தியானலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும் " சாய் சங்கமம்" நிகழ்ச்சியின் மூன்றாவது மாபெரும் ஹோமம் "ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்" கடந்த 12 .04 .2026 அன்று சென்னை, அயனாவரம், போலீஸ் மாணிக்கம் தெருவில் அமைந்துள்ள "ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் திருக்கோவிலி"ல் வெகு சிறப்பாக நடைபெற்றது.

குரு யோகி ஸ்ரீராம் பாபாவின் அறிவுரை மற்றும் ஆலோசனைக்கேற்ப, திருமதி ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களின் மேற்பார்வையில், சாய் தியானலயா ஆத்ம ஞான பீடத்தின் "ஆத்ம ஞானியர் குழு" நிகழ்ச்சியை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சூரிய பகவானின் தாக்கம் அதிகரிக் கும் இக் காலகட்டத்தில் " ஸ்ரீ தன்வந்தரி ஹோமம்" நடத்த ஏற்பாடு செய்தது மிக பொருத்தமாக இருந்தது. புரோகிதர் திரு. ராகவேந்திரன் அவர்கள் சிறப்பாக அமைத்திருந்தார். மேடையில் ஸ்ரீ மஹாலட்சுமி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு பகவான் தனது பரிவாரங்களுடன் வீற்றிருக்க அருகில் சாய் மகாராஜ் ஆனந்த ஸ்வரூபமாய் அருள்பாலித்தார். கலசகும்பங்களும் யாககுண்டம் எதிரில் தயாராக இருந்தது.

குரு ஸ்ரீராம் பாபா எழுதிய ஆத்ம

சாந்தி வெங்கடாசலம்

ஞான பாடலுடன் நிகழ்ச்சி துவங்கியது. குமாரி அமிர்தா மற்றும் அக்சயா இணைந்து பாடலை பாடினார்கள். "காண்பவன் இங்கே இல்லை என்றால், காண்கின்ற பொருட்கள் ஏதுமில்லை! கடவுள் கர்மா எல்லாமே எண்ணங்கள் தவிர ஏதுமில்லை உள்ளது நீயே என்றுணர்ந்தால், ஆக்கலும் அழித்தலும் நீயேதான் உனக்குள் உள்ளதை உணராது பர வெளிக்குள் தேடுவ தெவ்வாறு! நானார் என்றே தேடுவதே மெய்ஞானம் என்று அறிவாயே!

குணமிகு குருவை பணிவாயே! ஆத்மஞானத்தை நீயும் அறிவாயே!

அறிவால் உலகை ஆள்வாயே உள்ளது நீ என்று தெளிவாயே!"

ஆத்ம ஞானத்தை தேடுவோருக்கு எளிய தமிழில் கிடைத்த அரிய பொக்கிஷம் இப்பாடல். குமாரி அமிர்தா, அக்சயா இருவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஸ்ரீ தன்வந்திரி யாகத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து சுமார் 150 பேர் நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் கலந்துகொண்டு சிறப்பு செய்தனர். நேரில் வந்து ஹோமத்தை சிறப்பு செய்த அனைவருக்கும் வெயிலுக்கு இதமாக சுவையான நீர்மோர் வழங்கப்பட்டது. யாகம் தொடங்கும் முன்பாக யோகி ஸ்ரீராம் பாபா தன்வந்திரி ஹோமம் பற்றிய சிறு விளக்கவுரை அளித்தார்.

தொடர்ந்து குத்துவிளக்கு பூஜையை துவக்கிவைத்தார் நமது யோக குரு. நம் வாழ்வில் இருளை அகற்றி வெளிச்சம் கொடுக்கும் ஒளி தெய்வம், நமது உள்ளத்தில் இருக்கும் மூடநம்பிக்கை எனும் இருளினை அகற்றி, ஆன்ம சுடரை ஏற்றி வைக்கும் சக்தி வாய்ந்தது.

இத்தீப சுடரை முறைப்படி வழிபடுவது உலகில் உள்ள அனைத்து நல்ல சக்திகளை நமக்குள் ஆவாகனம் செய்வதற்கும், தீய சக்திகளில் இருந்து விடுவித்துக்கொள்வதற்கான எளிய வழியும் ஆகும் என தெரிவித்தார்கள்.

குத்து விளக்கு பூஜை எல்லா ஏற்பாடுகளுடன் இனிதே துவங்கியது. குத்து விளக்கு பூஜை செய்த அனைவருக்கும் பூஜைக்கான பொருள்கள் ஆத்மஞானியரால் வழங்கப்பட்டு சிறப்பாக குறைவின்றி நடத்த ஏற்பாடு செய்திருந்தார் குருஜி அவர்கள். ஒளி பூஜைக்கு என்று நம் குருஜி அவர்களே சிறப்பாக எழுதிய 108 போற்றிகளை கூறி பூஜை செய்வித்தார்.

விளக்கு பூஜை முடிந்ததும் அடுத்த பத்து நிமிடம் நமது குரு அனைவரையும் ஒளி தியானம் மேற்கொள்ள வைத்தது மிகுந்த மன நிறைவை கொடுத்தது. அதன் பின்பு ஸ்ரீ தன்வந்திரி ஹோமத்தை துவங்கினர் புரோகிதர். திரு.ராகவேந்திரன் அவர்கள், ஸ்ரீ கணபதி தொடங்கி அனைத்து தெய்வங்களையும் கலச கும்பங்களில் ஆவாகனம் செய்வித்து, மந்திரங்கள் கூறி அதற்கு விளக்கமும் தமிழில் கூறி, யாகத்தினை மிகச் சிறப்பாக செய்வித்தார்.

கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் உலக மக்கள் அனைவருக்காகவும் நீள்ஆயுள், நிறை செல்வம், உயர் கல்வி, வான்புகழ், மெய்ஞானம் பெற்று நோயற்ற பெருவாழ்வு வாழ தன்வந்திரி பகவானை வேண்டி மந்திரங்கள் கூறி அனைவருக்கும் தனித்தனியாக நட்சத்திர அர்ச்சனை செய்வித்தார்.

மேலும் அக்னி பகவானுக்கு செய்ய வேண்டிய சிறப்புகளை, மந்திரங்கள் மற்றும் பூஜை பொருட்களின் மூலம் செய்வித்து அக்னி தேவனை குளிர வைத்தார்கள். இறுதியாக பஞ் சாட்சர மந்திரம் கூறி பட்டு வஸ்திரம் சமர்ப்பித்து யாகத்தை சிறப்பாக முடித்து வைத்தார்கள்.

இந்த யாகத்தின் சிறப்பான ஒரு நிகழ்வு புரோகிதர். திரு.ராகவேந்திரன் அவர்கள் நமது யோகி ஸ்ரீராம் பாபாவுடன் சமீப காலமாக சித்தர் பீடங்களுக்கு பயணிக்கும் பொழுது, அங்கு தியானத்தில்



இருக்கும் போதெல் லாம் அவருக்கு நம் யோகி ஸ்ரீராம் பாபா அவர்களே அந்தர்யாமியாக தொடர்ந்து தோன்றிய தால் குருஜிக்கு சிறப்பு செய்வதற்காக "குரு காயத்ரி" மந்திரமும் "குரு அஷ்டோத்ர 108 நாமாவளியும்" தாமே இயற்றி, அதை"சாய் ஆத்மஞானபீடத்"திற்குசமர்ப் பித்து, குரு பூஜையும் செய்வித்தார்கள்.

கலந்துகொண்ட அனைத்து சாய் பக்தர்களும் புரோகிதருடன் சேர்ந்து குரு காயத்ரி மற்றும் குரு நாமாவளி கூறி ஆனந்தமாக குரு பூஜை செய்து குரு விடம் ஆசி பெற்றது சிறப்பான நிகழ்வு.

தொடர்ந்து அனைவரும் ஹோம குண்டத்தையும், ஸ்ரீ தன்வந்திரி பகவானையும், ஸ்ரீ லட்சுமி சமேத ஸ்ரீ விஷ்ணு பகவானையும், ஸ்ரீ சத்குரு ஸாயி பகவானையும் வலம் வந்து வணங்கி நம் குருவிடம் ஆசி பெற்று பிரசாதங்கள் பெற்று சென்றனர்.


ஹோமம் இனிதே நிறைவடைந்ததும் அனைவருக்கும் சுவையான அன்னதானம் அளிக்கப்பட்டது. அனை வரும் வயிறார உணவருந்தி மனநிறைவு டன் சென்றது திருப்தி அளித்தது.நமது யோகி ஸ்ரீராம் பாபாவின் "குருவைத் தேடி" நூலின் தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்கள் மற்றும் நமது நலன் கருதி சாய் ராஜயோக இயற்கை நல்வாழ்வு மையத்தின் மூலம் யோகி ஸ்ரீராம் பாபா, சாய் மகானின் அருளினால் நேரிடையாக தயாரித்து அளிக்கும், அனைத்து நோய்களுக்குமான தீர்வாகும் இயற்கை மூலிகை நிவாரண பொடிகள், சூரணங்கள் மற்றும் ஆயுர்வேத எண்ணெய்களையும் அனைவரும் ஆவலுடன் வாங்கி சென்றார்கள்.

இந்த ஹோமத்தை ஏற்பாடு செய்து, அதன் பலன்களை அனைவருக்கும் கிடைக்க செய்த குருஜி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களுக்கும், இந்நிகழ்ச்சிகளின் சூத்ரதாரியான சத்குரு சாய்பகவா னுக்கும் கோடானு கோடி நன்றிகளை சாய் அன்பர்களின் சார்பாக மனப் பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன். பக்தர்களின் நலம் விளையும் நம் யோக குரு ஸ்ரீராம் பாபா வின் தன்னலமற்ற அறிவுரைகளையும், போதனைகளையும் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கவும் அவரது சேவை மக்களை சென்று அடையவும் நாம் உற்ற உறுதுணையாக இருக்கவும் உறுதியேற்போம்.

மீண்டும் அடுத்த ஹோமத்தில் அனை வரையும் சந்திக்கின்றேன். குரு வாழ்க குருவே துணை, ஓம் சாய்ராம். ●

குரு–சிஷ்ய பந்தத்தின் மகிமை:

ஒரு சிஷ்யன் தயாரானதும் குரு அவனை தானாகவே தேடி வந்துவிடுகிறார். டாக்டர் தானேஸ்வருடைய பூர்வ ஜென்ம பலன்களினால் அவருடைய குரு அவரை சிறு வயது முதலே நிழல் போல தொடர்ந்து வந்திருக்கிறார். சிஷ்யருக்கு குருவை அடையாளம் தெரியாத போதிலும், சிஷ்யர் பக்குவம் அடைவதற்காக குரு பொறுமை யுடன் காத்திருந்து,



ஸ்ரீ சங்கர் மகராஜ் சரித்திரம்

தன்னை வெளிப் படுத்திக் கொண்டு அவரை ஆட்கொண்டு வழிநடத்துகிறார். என்னே அற்புதமான பந்தம் இந்த குரு–சிஷ்ய பந்தம்!

டாக்டர் தானேஸ்வர் தன் மருத்துவ படைப்பை முடித்துக்கொண்டு, தன் சொந்த ஊரான அகமது நகர் சென்றடைந்து, ஒரு வைத்தியசாலை தொடங்கி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தில் அதற்கான வேலைகளில் இறங்கினார். ஒரு மாத காலம் ஆகியும் அவரால் அதற்கு தேவையான பணத்தை புரட்ட முடியவில்லை. அவருடைய தந்தையும் அவருக்கு உதவி செய்யும் நிலையில் இல்லை. குழப்பமான சூழ்நிலை. மேற்கொண்டு என்ன செய்வது என்று அவர் தவித்து கொண்டிருக்கும் போது, திடீரென ஒரு நாள் ஸ்ரீ சங்கர் மகாராஜ் அவருடைய வீட்டுக்கு வருகை புரிந்தார். எப்படி இவர் அகமது நகரில் இருக்கும் தன்னுடைய வீடு தேடி வந்தார் என்பது அப்பாவுக்கு(டாக்டர் தானேஸ்வர்) புதிராகவே இருந்தது.

மகராஜ் வந்தவுடனேயே அப்பாவுடைய தந்தை அவரை முறையாக வீட்டுக்குள் வரவேற்றார். மகராஜ் ஏற்கனவே இவருக்கு பழக்கமானவர் மாதிரியான ஒரு தோரணையில் வரவேற்பு நடந்தது. இதை பார்த்த அப்பாவுக்கு, மகராஜுக்கும் தன்

தந்தைக்கும் ஏற்கனவே பழக்கம் இருக்குமோ? என்று தோன்றியது. அதை பற்றி மேலும் யோசிக்கும் நிலையில் அவர் அன்று இல்லை. அது என்ன என்பதும் அவருக்கு புரியவும் இல்லை. மகராஜ் அவர் வீட்டுக்குள் வந்து அமர்ந்தவுடன், அப்பாவிடம் எல்லா நலன்களும் விசாரித்துவிட்டு, அப்பாவுடைய வைத்தியசாலை வேலைகள் பற்றி ஒன்றும் தெரியாதது போல விசாரித்தார்.

போதியபணம்இல்லாதகாரணத்தினால் தன்னால் வைத்தியசாலை துவங்க முடியவில்லை என்று அப்பா கூறியவுடன் மகராஜ் ஒரு அற்புதத்தை அப்போது நிகழ்த்தினார். அகமதுநகரில் இருக்கும் அவருடைய சிஷ்யர்கள் பலரை அழைத்து, 'அப்பா தன்னுடைய சிஷ்யர் என்றும், அவர் மருத்துவம் படித்திருக்கிறார், அவருக்கு தேவையான உதவிகள் நீங்கள் அனைவரும் செய்ய வேண்டும்' என்று ஆணையிடுகிறார். அடுத்த நொடியே அவருடைய சிஷ்யர்கள் அனைவரும் அப்பாவுக்கு தேவையான பணத்தை கொடுத்தது மட்டுமல்லாமல், வைத்திய சாலைக்கான இடத்தையும் கொடுத்து உதவினார்கள்.

குருவின் அருள் நாம் கேட்டுத் தான் கிடைக்க வேண்டுமா? குரு அனைத்தையும் அறிந்தவர் தானே! அவர் சர்வவல்லமை உள்ளவர் என்பதை நாம் அறிந்திருக்கும் போதும், நாம் ஒன்றை பிரார்த்தனை செய்துதான் அவர் அளிக்க வேண்டும் என்பதில்லை அல்லவா? நாம் நம்மை தகுதியானவர் ஆக்கி கொள்ளும் போது, டாக்டர் தானேஸ்வருக்கு நடந்தது போல குருமார்கள் தன் பக்தர்கள் வீடு தேடி வந்தல்லவா உதவுவார்கள்!

நாம் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதும் குருவின் அனுக்கிரகம்தான் என்று ஏற்றுக் கொள்ளும்போதுதான் குருவின் மீது முழுமையான சரணாகதி உண்டாகிறது. குருவின் மீது முழுமையான அன்பும் நம்பிக்கையும் இருந்தால், அனைத்துமே சரிதான்.

டாக்டர் தானேஸ்வர் மகராஜின் பரிபூரண அனுகிரகத்தினால் தன்னுடைய வைத்தியசாலையை ஒரு நன்னாளில் திறந்தார். அந்த நிகழ்ச்சியில மகராஜும் கலந்து கொண்டார். அவருக்கு ஆசீர்வாதத்தை வழங்கி சில அறிவுரைகள் கூறினார். "இந்த வேலையை நீ தொழிலாக செய்யக்கூடாது, சேவையாக செய்ய வேண்டும். ஏழை எளியவர்கள் பணக்காரர் போன்ற வித்தியாசம் பார்க்காமல் அனைவருக்கும் ஒரே மாதிரியான



திருமதி. மாதங்கி பாலாஜி

வைத்தியம் செய்ய வேண்டும். அதிகமாக கட்டணம் வசூலிக்கக் கூடாது" என்று கூறிவிட்டு, "உன் வாழ்க்கைக்கு எவ்வளவு பணம் தேவையோ அந்த பணம் உனக்கு கிடைக்கும்" என்கிற வாக்குறுதியும் அளித்து அவர்க்கு ஆசி வழங்கினார்.


டாக்டர் தானேஸ்வரும் மகராஜ் கூறியபடியே நடந்து கொண்டார். அனைவரிடமும் ஒரு ரூபாய் கட்டணமும், மருந்துகளுக்காக ரெண்டு அனா மட்டுமே வாங்குவார். அவருக்கு ஏதாவது பணத்தட்டுப்பாடு அல்லது பண கஷ்டம் ஏற்பட்டால் கூட அதிகமான பணம் வசூலிப்பதில்லை. அப்போது இருந்த மற்ற மருத்துவர்களை விட இவர் குறைந்த கட்டணம்தான் வாங்கினார்.

அந்த காலகட்டத்தில் இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. அச்சமயத்தில் ஆங்கில மருந்துகள் வெளிநாடுகளில் இருந்து வருவது தடைப்பட்டு போனது. அவர் ஏற்கனவே அறிந்திருந்த ஆயுர்வேத மருத்துவ முறை அச்சமயத்தில் அவருக்கு கைகொடுத்தது. அந்த முறையில் வைத்தியம் பார்த்து தன்னுடைய சேவைக்கு எந்தவித தடையும் உண்டாகாமல் தொடர்ந்து செய்து கொண்டே வந்தார்.

இப்படி குருவின் வாக்குகளை துளிகூட மீறாத சிஷ்யராக டாக்டர் தானேஸ்வர் இருந்தாலும், சில வித்தியாசமான குணங்களையும் அவர் வெளிக்காட்டினார். மகராஜுக்கு டாக்டர் தானேஸ்வர் மீது அலாதியான பிரியம். அதன் காரணமாக அகமதுநகரில் தங்கும் நாட்களில் அவரை சந்திப்பதற்காக நேரில் வந்துவிடுவார். மகராஜ் சித்த நிலையில் இருந்தவர் என்பதால், குழந்தைத்தனமாக நடந்து கொள்வார். அவருடைய மனநிலையில் மாற்றங்கள் இருந்து கொண்டே இருக்கும். திடீரென கோபப்படுவார், திடீரென சந்தோஷமாக இருப்பார், திடீரென சாமான்கள் அனைத்தையும் எடுத்து தூக்கி வீசி எறிவார்.

மகராஜ் ஒருநாள் தானேஸ்வருடைய டிஸ்பென்சரிக்கு வந்திருந்தார். மேஜை மேல் இருந்த முக்கியமான சில பேப்பர்கள் எல்லாவற்றையும் எடுத்து தூக்கி வீசி எறிந்து விட்டார். இதை பார்த்த டாக்டர் தானேஸ்வருக்கு பயங்கரமாக கோபம் தலைக்கேறியது. அன்று அவருக்கு இருந்த ஒரு சொந்த பிரச்சனையின் காரணமாக அவர் பதட்டமான மனநிலையில் இருந்தார். தான் என்ன செய்கிறோம் என்ற சுய சிந்தனை இல்லாமல் மகராஜை தன் அறையை விட்டு வெளியே தள்ளிவிட்டார். மகராஜ் மாடிப்படியில் உருண்டு செல்கிறார், அவரை தூக்கிவிட வேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லாமல் கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார். கோபத்தின் தீவிரம் அதிகமாக இருந்ததால், டாக்டர் தானேஸ்வர் மயக்கம் அடைந்து விழுந்துவிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர் கண்விழித்து பார்க்கும் போது, தான் யாருடைய மடியிலோ



படுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்து பார்த்தபோது, அவர் மகராஜுடைய மடியில் படுத்திருப்பதை பார்த்தவுடன் அவருக்கு பகீர் என்றிருந்தது. என்னடா இது! தான் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்ட போதிலும், மகராஜ் அதைப் பற்றி துளி கூட யோசிக்காமல் தன்னை மடியில் தாங்கிக் கொண்டிருக்கிறாரே! என்று வெட்கி கூனிக் குறுகி போனார்.

பலநாட்களுக்கு முன் இறந்து போன தன் தாயின் ஸ்பரிசத்தை அன்று அவர் உணர்ந்தார். மகராஜ்தான் தன்னுடைய தாய் என்பதை அவர் உணர்ந்து கொள்கிறார். ஒரு தாய் தன் குழந்தையுடன் இந்த குறிப்பிட்ட ஜென்மத்தில் மட்டும்தான் தாய்–சேய் என்கிற பந்தத்தில் இருக்கிறாள். ஆனால் குரு என்னும் தாய் பல ஜென்மங்களாக நம்முடன் தொடர்பில் இருப்பவர் என்பதை அந்த நிமிடத்தில் அவர் உணர்கிறார். இந்த மாதிரியான பந்தம் குரு–சிஷ்ய உறவில் மட்டும்தான் நிகழும் என்பதை அந்த நேரத்தில் புரிந்து கொண்ட டாக்டர் தானேஸ்வர் , இனி மகராஜ் எப்படி தன்னிடம் நடந்து கொண்டாலும் அதை அவ்வாறே அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டார்.

இதன்மூலம் மகராஜ் அவருக்கு சகிப்புத்தன்மையை போதித்திருக்கிறார். நம் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொன்றையும் சகித்துக் கொள்ளும் போது, நம்முள் சரணாகதி எந்த முயற்சியும் இல்லாமல் உண்டாகிவிடும். டாக்டர் தானேஸ்வருக்கு மட்டுமல்லாமல் இந்த லீலையை அறிந்து கொள்ளும் அனைத்து பக்தர்களும், சகிப்புத்தன்மையை வளர்த்துக்கொண்டு, அனைத்தும் குருவின் விருப்பம் என்று ஏற்றுக்கொள்ளும் போது, எல்லா நிகழ்வுகளும் நமக்கு அனுபவமாகவே இருக்கும். அனுபவமே ஞானம் என்பதை நாம் அறிந்து கொள்வோம். அந்த ஞானம்தானே குரு நமக்கு அளிக்கும் போதனை!

ஸ்ரீ சங்கர் மகராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!



வெப்பம் தணிக்கும் வெந்தயக்கீரை

வாரத்துல 2 நாள் வெந்தய கீரை சாப்பிடறவங்களுக்கு இந்த எல்லா பலன்களும் கிடைக்கும். இந்த வெந்தய இலைகள் இந்தியா மற்றும் பிற ஆசிய நாடுகளில் பரவலாக விளைவிக்கப்படும் உணவுப் பொருளாகும். இது மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

வெந்தயக் கீரையை குறைந்தது வாரத்திற்கு இரண்டு நாட்கள் உணவில் சேர்த்துக் கொண்டு வருவதன் மூலம் ஒட்டுமொத்த உடலிலும் நிறைய ஆரோக்கிய மாற்றங்களைப் பெறலாம்.

வெந்தயக் கீரை இயற்கையாகவே சற்று கசப்புத் தன்மை கொண்ட கீரையாக இருக்கிறது. இதை அப்படியே சாலட்டாகவோ அல்லது பச்சையாகவோ சாப்பிட முடியாது. சமைத்து தான் சாப்பிட முடியும். அதேபோல தினமும் எடுத்துக் கொள்ள முடியாது என்பதால் குறைந்தது வாரத்திற்கு இரண்டு முறையாவது எடுத்துக் கொள்ளலாம்.

வெந்தயக் கீரையில் ஏராளமாக ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அவை, நார்ச்சத்து (Dietary Fiber) வைட்டமின் A, வைட்டமின் C, வைட்டமின் K, கால்சியம் (Calcium), இரும்பு (Iron), பொட்டாசியம் (Potassium), மக்னீசியம் (Magnesium), ஆண்டி – ஆக்ஸிடன்ட்கள் (Antioxidants), புரதங்கள் (Protein), நியாசின் (Niacin), ஃபோலேட்

(Folate) ஆகிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

வெந்தய கீரை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் ரத்த சர்க்கரை கட்டுப்பாடு, வெந்தய கீரை ரத்த சர்க்கரையை கட்டுப் படுத்த உதவுவதால், நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் உகந்தது.

வெந்தயக் கீரையில் உள்ள நார்ச் சத்துக்கள் மலச்சிக்கலைக் குறைத்து செரிமானத்தை மேம்படுத்தும் திறன் கொண்டது.. கீரையில் உள்ள நார்ச்சத்துக்கள் மற்றும் ஆன்டி– ஆக்ஸிடன்ட்கள் கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்தி இதய ஆரோக்கியத்தை மேம்படுத்து கிறது.

வெந்தய கீரை இயற்கையாகவே மலமிளக்கியாக செயல்படுகிறது. ஆசணவாயில் ஏற்படும் வீக்கத்தைக் குறைத்து மூல நோய் ஆபத்தைக் குறைக்கிறது. வெந்தயக் கீரைக்கு இயற்கையாகவே பால் உற்பத்தி தூண்டுதல் திறன் கொண்டது. தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கு பால் உற்பத்தியை அதிகரிக்க வெந்தய கீரையை அதிகமாக உணவில் சேர்க்கலாம்.

வெந்தய கீரை சருமத்தில் உள்ள கழிவுகளை வெளியேற்றி டீடாக்ஸ் செய்து சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தும். வெந்தய கீரை தசைகளை வலுப்படுத்தி தசை வீக்கம் மற்றும் மூட்டுகளின் வலியை குறைக்க உதவுகிறது. வெந்தய கீரைக்கு கிருமி எதிர்ப்பு தன்மைகளைக் கொண்டது, இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

வெந்தயக் கீரையை பல்வேறு வகைகளில் உணவில் சேர்த்துக் கொள்ள முடியும். கீழ்வரும் பல வழிகளில் வெந்தயக் கீரையை சேர்த்துக் கொள்ளலாம்.

வெந்தய கீரையை கடையலா கவும், பொரியலாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

சாலட்டுகளில் சேர்த்துக் கொள்ளலாம்.

ரொட்டிகளில் வெந்தயக் கீரையைச் சேர்த்துக் கொள்ளலாம். தயிருடன் சேர்த்து பச்சடியாகவும் சாப்பிட முடியும். குழம்பு செய்து சாப்பிடலாம். பொரியல், கூட்டு செய்து சாப்பிடலாம். உலர்ந்த வெந்தயக் கீரையை கிரேவிகளில் தூவி அதன் சுவையை கூட்டலாம். துவையலாக செய்து சாப்பிடலாம். வடை போன்றவை செய்யும்போது மற்ற கீரைகளை சேர்ப்பது போல வெந்தய கீரையை சேர்த்து வடை செய்யலாம்.

வெந்தயக் கீரை பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டிருந் தாலும் சில உடல் நலப் பிரச்சினை இருப்பவர்கள் உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தவிர்க்க வேண்டும். குறைந்த ரத்த அழுத்தம் உள்ளவர்கள், அலர்ஜி பிரச்சினை உள்ளவர்கள், கர்ப்பிணி பெண்கள், அதிக ரத்தப்போக்கு பிரச்சினை உள்ளவர்கள், குறைந்த ரத்த சர்க்கரை பிரச்சினை உள்ளவர்கள், சிறுநீரக பிரச்சினைகள், அறுவை சிகிச்சைக்கு முன், பின், வெந்தயக் கிரையை தவிர்க்க வேண்டும்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

கால நாயகன்

காலம் பொன் போன்றது ! ஆனால் நம் குரு காலம் பொன்னை விட உயர்ந்தது என்பார். எல்லா மாற்றங்களுக்கும் பொதுவான ஒரே அச்சாணி காலம் மட்டும் தான். கடந்து சென்ற காலத்தை அறிவியலோடும் ஆன்மீகத்தோடும் ஒப்பிட்டு பார்த்த மகான்கள் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பதை அறிந்து கொண்டார்கள். ஆகவே அவர்கள் காலத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு நிகழ்காலத்திலேயே வாழ்ந்தார்கள்.

இதன் மூலம் வானியல் மாற்றங்களை உணர்ந்து இனி வரும் காலங்களில் நமது பாதை எவ்வாறு இருக்கும் அதில் எவ்வாறு பயணிக்கவேண்டும் என்பதை பதிவு செய்து வைத்தார்கள். அப்பதிவினை பின்பற்றி அடுத்தடுத்து வந்த மகான்கள் காலத்திற்கேற்றார் போல் இலகுவாக்கி வானியலோடு வாழ்வியலை பொருத்தி பார்க்கும் பக்குவத்தை மக்களிடையே போதித்து வந்தார்கள் .

ஆனால் விஞ்ஞானிகள் காலத்தை அறிவியல் கண்கொண்டு கணித்தார்கள் இதன் விளைவால் காலத்தில் இருந்து நேரத்தை உருவாக்கி அந்நேரத்தை மையப்படுத்தியே அனைத்தையும் கண்டுபிடிந்தார்கள். அதன் பொருட்டு மனிதயினம் மட்டும் நேரத்திற்க்குள் தன்னை சுருக்கிக் கொண்டு மனம் விரிவடையாமல் உலகியலோடு பயணப்படுவதையே பழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

அதிலிருந்து விஞ்ஞானி மட்டும் காலத்தோடு பயணப்பட்டு வானியல் மாற்றங்களை கண்டுபிடித்தாலும் ஆதாரத்தை உருவாக்குவதற்குள் காலம் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தி விடுகிறது . இதனால் விஞ்ஞானியாலும் நிகழ்காலத்தில் பயணிக்க முடியாத சூழலில் சிக்கிக்கொள்கிறார் .

இதனை அறிந்துதான் மகான்கள் வானியல் மாற்றங்களோடு இணைந்து செயலாற்றினார்கள் அதனால் தான் அவர்களால் நிகழ்காலத்திலேயே பயணிக்க முடிகிறது. ஆகவே மெய்ஞானி விஞ்ஞானிக்கு எப்போதும் எட்டா கனியாகவே திகழ்கிறார்கள் அவ்வாறு வந்த மெய்ஞானிகளில் 'பகவான் சாய்நாதர்' ஆசியால் வளர்த்தெடுக்கப்பட்ட மக்களோடு மக்களாக பயணிக்கும் நம்குரு 'யோகி ஸ்ரீராம் பாபா' அவர்கள் நிகழ்காலத்திலேயே தன்னை நிலை நிறுத்தி 'காலத்தோடு' இணைந்து கால நாயகனாக வெளிப்பட்ட நிகழ்வினை தங்களிடத்தில் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த 2022 ஆம் வருடம் ஜூலை மாதம் 13 ஆம் தேதி நமது குருநாதர் ஏற்பாடு செய்திருந்த ஷீரடி புனித யாத்திரையில் கலந்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அப்பயணத்தில் மொத்தம் 36 நபர்கள் கலந்துக்கொண்டனர். காலை 10.20 மணிக்கு இரயில் புறப்படும் நேரம் என்பதால் அனைவரையும் 9.00 மணிக்கெல்லாம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்க்கு வரும்படி குரு கூறியிருந்தார். ஆனால் நாங்கள் நேரத்தை மையப்படுத்தி செயல்பட்டதால் 9.00 மணி முதல் 10.15 வரை ஒவ்வொரு நபர்களாக வந்துக்கொண்டே இருந்தோம்.

ஏனென்றால் இரயில் புறப்படும் நேரம் 10.20 மணிதானே என்ற

சொ.அகஸ்டின்



சிந்தை ஒவ்வொரு நபருக்குள்ளும் பதிந்துவிட்டது. ஆனால் நம்குருவோ காலத்தோடு இணைந்து செயல்பட்டதால் முதல் ஆளாக இரயில் நிலையத்திற்கு வந்து எங்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார். மேலும் அவர் கூறினார் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைப்பதற்காகவே உங்கள் அனைவரையும் 9.00 மணிக்கு வரும்படி கூறியிருந்தேன் ஆனால் அனைவரும் காலம் தள்ளி வந்ததால் அம்மாதிரி செய்யமுடியாமல் போயிற்று.

எனவே காலத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறி அவரவர் இருக்கையில் அமரச்செய்தார். சரியாக 10.20 மணிக்கு புறப்பட்ட. இரயில் மறுநாள் காலை 10.00 மணிக்கு ஷீரடி சாய்நகர் இரயில் நிலையம் சென்றடைந்தது. அங்கிருந்து ஆட்டோக்கள் மூலமாக தங்கும் விடுதிக்கு சென்றோம். சிறிது ஓய்விற்கு பிறகு குரு அவர்கள், அனைவரையும் சாய் மந்திர்க்கு அழைத்துச் சென்றார் பகவான் சாய் நாதரை மனதார தரிசித்து விட்டு தங்கும் அறைக்கு திரும்பினோம்.



மறுநாள் காலை 5.00 மணிக்கெல்லாம் ஹோட்டல் வளாகத்தில் வந்துவிடுங்கள் இங்கிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் பாபாவின் சீடரான சிவநேசன் மந்திர்க்கு செல்லவேண்டும் என்று கூறி அனைவரையும் அவரவர் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறினார்.

அதன்படி விடியற்காலை 5.00 மணிக்கு ஒன்றிணைந்து நடை பயணமாக புறப்பட்டோம் சுமார் 500 மீட்டர் கடந்து இருப்போம் அப்போது எங்கிருந்தோ வந்த ஒரு பைரவர் எங்களுடன் இணைந்து கொண்டது. பார்ப்பதற்கு சாதுவாக இருந்தது அந்த பைரவர். உடன் பயணித்தவர்கள் அதற்கு பிஸ்கட், ரொட்டி என ஒவ்வொன்றாக வாங்கி கொடுத்தனர் ஆனால் அந்த பைரவர் எதையும் சாப்பிடாமல் எங்களுடன் மூன்று கி.மீ பயணம் செய்து சிவநேசன் சமாதி மந்திருக்கு வந்தது.

அதுவரை எங்களது நடவடிக்கையை கவனித்துவந்த குரு கூறினார் நீங்கள் எது கொடுத்தாலும் அது சாப்பிடாது ஏனென்றால் அது கால பைரவர். அவர்கள் வந்த வேலையை மட்டுமே பார்ப்பார்கள். இன்னும் சற்று நேரத்தில் தியானம் தொடங்கும். எவரும் இடையில் கண்விழிக்க கூடாது அப்பொழுது இங்கே இன்னொரு பைரவரும் வருவார். எனவே அவர்கள் அவர்களது வேலையைச் செய்வார்கள். நீங்களும் உங்களது வேலையான தியானத்தை காலத்தோடு இணைந்து செய்யுங்கள் என்றார்.

குரு சொன்னது போலவே தியானத்தின் போது இரண்டு பைரவர்கள் வந்ததும் தியானித்தவர்களின் உச்சந்தலையில் தன் நாவால் தடவிக்கொடுத்ததும் என பல்வேறு

நிகழ்வுகள் நடந்ததை உணர்ந்து அனைவரும் ஆச்சர்யப்பட்டனர். தியானம் முடிந்து மீண்டும் எங்களுடன் பயணப்பட்ட பைரவர்கள் இடையில் திடீரென மறைந்தார்கள். பைரவர்கள் வந்தார்கள், சென்றார்கள் அவர்கள் ஏன் வந்தார்கள்? என்ன செய்தார்கள்? எங்கு சென்றார்கள்? இவை அனைத்தும் காலத்தோடு பயணப்படும் குருவிற்கு மட்டுமே விளங்கும்.

மறுநாள் காலை சிற்றுண்டி முடிந்ததும் 8.00 மணியளவில் எல்லோரா குகை கோவிலுக்கு பேருந்தில் புறப்பட்டோம் . பயண தூரம் அதிகம் என்பதால் கலைப்பு தீர 10.00 மணிக்கு கரும்புச்சாறு வழங்கப்பட்டது . சிறிது நேரத்தில் அனைவரையும் கண்காணித்த நம்குரு அவர்களை உற்சாகப்படுத்த சத்சங்கத்தை ஆரம்பித்தார். இப்படியே சென்ற உரையாடல் ஒருகட்டத்தில் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்வி வந்தது இருந்தால் காட்ட முடியுமா என்றும் கேட்டனர்.

குரு அவர்கள் சற்றும் மனம் தளராமல் உங்கள் கடவுளை காட்ட நான் தயார் யாரை காட்ட வேண்டும் என்று நீங்களே சொல்லுங்கள் என்றார். இப்படி ஒரு பதிலை எவரும் எதிர்பார்க்கவில்லை. உடனே யாத்திரீகர்களும் சற்றும் சலைக்காமல் ஆளுக்கொரு கடவுள் பெயரை கூறினார்கள் ஓட்டுனர் அருகே அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த என் பார்வைக்கு இது வாதமாக தெரிந்தாலும் சுவாரசியமாக இருந்தது.

முன் இருக்கையில் நின்று 36 பயணிகளையும் பார்த்து குரு கூறினார் இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கடவுளை காட்டச்சொன்னால் எப்படி முடியும்? முதலில் உங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு எவரேனும் ஒரு கடவுளைக் காட்டச் சொல்லுங்கள் நான் காட்ட தயார் என்று கூறினார். குரு வாதத்தில் இருந்து நழுவுவதாக தெரிந்தாலும் ஏகத்துவம் தானே உண்மை என்று உணர்ந்து அனைவரும் அமைதி காத்தனர்.

இது சில வினாடிகள் தொடர்ந்திருக்கும் கடந்த இரண்டு நாட்களாக நடந்த நிகழ்வுகள் காலத்தோடு ஒன்றிணைத்தது ஓர் பயணியின் குரல். நாங்கள் ஷீரடிக்கு வந்ததே பாபா வை பார்க்கதான் ஆகவே எங்களுக்கு பாபா வையே காட்டுங்கள் என்றது குரல் உடனே அனைவர் நாவிலும் பாபா பாபா என்ற சொல் ஓங்கி ஒலித்தது. குரு அவர்கள் சற்றும் தாமதிக்காமல் சரி காட்டுகிறேன் என்றதும் அனைவரும் திகைத்து குருவையே பார்த்தார்கள்.

எனக்கும் ஆவல் கூடியது அனைவரும் குருவை பார்க்கிறார்கள் என்ன நடக்க போகிறதென்று. குரு ஓட்டுனர் பக்கமாக திரும்பினார் தோளில் இருக்கும் துண்டை எடுத்து ஒரே விநாடியில் பகவான் சாய்நாதர் கட்டியிருப்பதை போன்று தலையில் கட்டியவர் நிமிர்ந்து பக்தர்களை பார்த்து இரு கைகளை உயர்த்திய 'அல்லா மாலிக் ஏக் கை' என்றார். அந்த நொடி குரு அவர்கள் அனைவர் கண்களுக்கும் "பகவான் சாய்நாதராகவே" காட்சி தந்தார்.

பேரூந்தில் இருந்த அனைவரும் ஆச்சர்யம் கலந்த பரவசத்தில் ஆழ்ந்தனர் ஆனந்த கண்ணீர் விட்டனர் அனைவரும் ஆத்மார்த்தமாக சாய்நாத் மகராஜ்கி ஜே என்று முழக்கமிட்டனர். காட்சிகளை கவனித்த எனக்கு வள்ளுவ பெருமானார் கூறியது நினைவுக்கு வந்தது

"ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்"

(ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்தால், பூவுலகம் முழுமையையும் வேண்டினாலும் அது தன் கைவசப்படும்) குரு எப்போதும் காலத்தோடு பயணிப்பார். ஆயினும் வெளிப்படுத்தமாட்டார். ஆனால் அன்று மக்களுக்காக 'காலநாயகனாக' வெளிப்பட்டார் இதை நேரில் கண்ட 36 நபர்களே சாட்சி. ●

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.

திரு.சுவாமிநாதன் பிரவீணா குடும்பத்தார். ரூ.2500.

திரு. சுவாமிநாதன் குடும்பத்தார், சென்னை. ரூ.2500

திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி. உமா மகேஸ்வரி, ஜோதிடர், அயனாவரம். ரூ.2000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. சரோஜா குடும்பத்தார், சென்னை. ரூ.1000.

திருமதி.அர்ச்சனா சாய், OMR. ரூ.1008

திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திரு. இராஜசேகர், அயனாவரம். ரூ. 1000.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. நாகராஜன் பரிமளா குடும்பத்தார். கொளத்தூர். ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திரு. வெங்கடாசலம், டி.நகர். ரூ.500.
திருமதி.பி. மகாலட்சுமி.மதுரை. ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன், சென்னை. ரூ.500.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.500.
திரு. சாந்தமூர்த்தி,போரூர். ரூ.500.
திருமதி. உமா விஜய்ஆனந், அயனாவரம். ரூ.400.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.202.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.200.
செல்வி. அட்சயா தேவக்குமார் பெரம்பூர். ரூ.200.
திருமதி. தமிழரசி, அயனாவரம். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர். ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.200.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
செல்வி அட்சயா, பெரவளூர். ரூ.200
திருமதி அனிதா, திருப்பூர். ரூ.200
திருமதி எஸ். உஷா, கௌத்தூர். ரூ.100
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும்
அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும்
என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM

INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai

AC.No: 6219480677

IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068